www.tamilarangam.net

அன்பளிப்பு 40 p

# களத்தில்

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் பத்திரிகை 10. 07. 1992

## "பிரேமா" வின் தெரிவுக்குழு இரகசியம் அம்பலமானது!

சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா, எவ்விதத்திலும் வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் தீர்வை தெரிவுக்குழு வெளியிடக்கூடாதென இரகசிய உத்தரவு வழங்கியிருந்தாராம். அதேவேளை கூடி நின்று கும்மாளமடிக்கும் தமிழ்த்துரோகக் குழுக்களைத் திருப்திப்படுத்தக் கூடியவாறு காலத்துக்கு காலம் ஏதாவது கூறி காலநீடிப்பு செய்ய வேண்டுமெனவும் உத்தரவிடப்பட்டிருந்ததாம்.

இந்நிலையில் சிறிலங்கா அரசுடன் உறவாடும் தமிழ்க் குழுக்கள் தமது சுயருபத்தை உலகு மேலும் தெளிவாக இனங் கண்டு விடுமென அஞ்சி தெரிவுக்குழுவிடம் கெஞ்சினர். இதனால், 5 வருடங்களுக்கு தற்காலிகமாக வடக்கையும் கிழக்கையும் இணைப்பது. தீர்வு கண்டு விட்டதாக விடுதலைப் போராட்டத்தை திசை திருப்புவது அதன்பின்னர் மீளவும் சர்வசன வாக்கெடுப்பு நடாத்துவது என்ற முன் மொழிவு ஒன்றை தெரிவக்குழு இரகசியமாக ஆராய்ந்து வருகிறது.

இவ்விதமாக ஒரு போலியான 5 வருட இணைப்பை ஏற்படுத்தும் அதேவேளை, இப்பகுதிகளில் பெருந்தொகையில் சிங்களவர்களைக் குடியமர்த்தவும் சிறிலங்கா அரசு திட்டமிடுகிறதாம். இவ்விதம் செய்வதன் மூலம் தமிழர் தாயகத்தை சிங்களமயமாக்கி பின்னர் சர்வசனவாக்கெடுப்பில் வென்றுவிடலாம் என சிறிலங்கா பௌத்த சிங்கள பேரினவாதிகள் சதித்திட்டம் தீட்டிவருகின்றனர்.



பிரபாகரன் காலத்தில் பிறந்தோம்
பெருமைப் படு.
அவன் காலத்தில் விடுதலை பெறுவோம்
உறுதி எடு.

# Y-8 விமானம் சுட்டுவீழ்த்தப்பட்டது

Y8 சீன விமானமொன்றில் 19 இராணுவக் குழுவினர் ஆனையிறவு நோக்கி வந்து கொண்டிருந்தனர். புலிகள் சுட்டு விடுவார்கள் என்ற அச்சத்தில் விமானமோட்டி 5000 அடி உயரத்தில் பறந்து கொண்டிருந்தான். அந் நேரத்தில் 90 கலிபர் விமான எதிர்ப்பு பீரங்கியை கொண்டு புலிகள் தமது தாக்குதலைத் தொடுத்தனர். குறி தவறாமல் விமானத்தில் குண்டு பட்டதும், அக்கினிப் பிழம்பாகி விமானம் வெடித்துச் சிதறியது. சுமார் 300 அடி விட்டத்தில் சிதைந்த உடல்களும் நொறுங்கிய விமானச் சிதறல்களும் கீழே விழுந்தன.

இரத்மலானை விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட இவ் விமான விபத்தில், கொல்லப்பட்ட ஆறு அதிகாரிகளில் சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஏயார் மார்சல் வோல்டர் பெர்ணாண்டோவின் மகனும் ஒருவர் எனத் தெரியவந்துள்ளது.

"நீண்ட காலமாக பொது மக்கள் மீது பயங்கரவாதம் புரிந்து வந்த இராணுவ விமானங்களில், ஒன்றின் மீது நடாத்தப்பட்ட வெற்றிகரமான தாக்குதல் இது" என விடுதலைப்புலிகளின் தலைமைப்பீடம் விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மணிக்கு 497 மைல் வேகத்தில் செல்லக்கூடியதும், 112 அடி நீளம் 37 அடி உயரம் கொண்டதும், 150 பேர் பயணம் செய்யக் கூடியதுமான y 8 சீனத் தயாரிப்பு விமானம் விடுதலைப்புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டதானது, சிறிலங்கா அரசைப் பெரும் கலக்கத்திற்கு உள்ளாக்கி உள்ளதென அரசியல் வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்துள்ளன. 6 அதிகாரிகள் உட்பட 19 விமானப் படையினர் கொல்லப்பட்டதும், குடாநாட்டில் மேற்கொள்ளப்படும் "பலவேயக 2" நடவடிக்கைக்கென கொண்டு செல்லப்பட்ட பெருந்தொகையான ஆயுதங்களை இழந்ததுமான இச் சம்பவம், சிறிலங்கா விமானப் படை வரலாற்றிலேயே மிக மோசமான இழப்பு என சிறிலங்காப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இச் சம்பவத்தில் கொல்லப்பட்ட விமானப் படையினர் சிலரது உடல்களை விடுதலைப்புலிகள், புல்லாவெளியிலிருந்து பளைப் பகுதிக்கு கொண்டு சென்றுள்ளனர் என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதே வேளை, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலமாக இவ் உடல்களை பெற்றுக் கொள்ளும் முயற்சியில் கொழும்பில் உள்ள பொது அமைப்புக்கள் ஈடுபட்டுள்ளதாக அறியப்படுகின்றது. கடைசியாக கிடைத்த தகவலின் படி யாழ்ப்பாணத்தில் வீழ்த்தப்பட்ட விமானத்தின் சிதைவுகளும் இறந்த இராணுவத்தினன் ஒருவனின் உடலும் பொதுமக்க

தொடர்ச்சி 7ம் பக்கம் ....



பிரதி தலைவர் மகேந்திரராஜா 'மாத்தையா' தமிழீழ மக்களின் குறை கேட்டு நிவர்த்தி செய்யும் பணியில்......

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# இதுவே தீர்வு!

"இனப்பிரச்சினை தொடர்பான பாராளுமன்ற தெரிவுக்குழுவின் ஆலோசனைப்படி, மாகாணசபைகள், மாநகர சபைகள், பிரதேச சபைகள் ஆகியவற்றிற்கு கூடுதல் அதிகாரங்களை வழங்க அரசாங்கம் தயாராக இருக்கின்றது" என சிறீலங்கா ஜனாதிபதி பிரேமதாசா கூறியுள்ளார். இதுதான் சிங்கள பேரினவாத சிறீலங்கா அரசு தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு காட்டியுள்ள தீர்வு.

இந்தத் தீர்வை அமுலாக்குவதற்கு தடை தமிழீழ விடுதலைப் புலிகளே. அவர்களை பலமிழக்கச் செய்தால் தமிழீழ மக்களை இலகுவாக ஆயுத முனையில் அடிமைப்படுத்தி மேற்சொன்ன தீர்வை திணிக்கலாம் என்பதே சிறீலங்கா அரசின் இன்றைய இராணுவத் தாக்குதல்களுக்கான இராஜ தந்திரம். தமிழீழ மக்கள் இனம். தமிழீழம் எனப்படுகின்ற அவர்களின் தாயகம். இத் தாயகத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ள சிறீலங்காவின் ஆக்கிரமிப்பு படைகளை துரத்தி மண்ணை மீட்பதற்கு தமிழீழ மக்கள் நடாத்தும் தேசிய விடுதலைப் போராட்டம். அந்தப் போராட்டத்தை சிறீலங்காப் படைகள் எவ்வாறு ஆயுதப் போராட்டமாக வடிவெடுக்க வைத்தனர் என்னும் வரலாறு. ஆயுதப்போராட்டத்தின் சட்டவலுத் தன்மை. தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் தலைசிறந்த வழிகாட்டலில் தமிழீழ விடுதலைப்புலிகளும் மக்களும் அடைந்து வரும் வெற்றிகள். தமிழீழ மக்களையும் மண்ணையும் பாதுகாத்து பரிபாலிக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளால் தோற்றுவிக்கப்பட்டுள்ள அரசாங்கத்தை அமைக்கக் கூடிய அரசு (DEFACTO GOVERNMENT) இவையே நடைமுறையில் காணப்படும் யதார்த்தபூர்வமான உண்மைகள்:

ஆனால் சிறீலங்கா அரசு இந்த நடைமுறை யதார்த்தத்தை சர்வதேச சமூகத்தின் முன் மறைப்பதற்கும், தமிழீழ மக்களை இனப்படுகொலை செய்வதற்குமே இராணுவ நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுள்ளது. கொழும்பில் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஜனநாயக மரபில் பாராளுமன்றத் தெரிவுக் குழுவை நியமித்து விட்டேன் என சர்வதேச சமூகத்திற்கு தம்பட்டமடித்து உலகின் மனித உரிமை இயக்கங்களும் சமாதான இயக்கங்களும் தலையிடாதவாறு தடுத்தார் பிரேமதாசா. அதேவேளை எக்காரணம் கொண்டும் வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் முடிவை எடுக்கக்கூடாதென இரகசியமாக தெரிவுக்குழுவிற்கு கட்டளையும் கொடுத்தார். ஒற்றையாட்சியின் கீழ் இப்பொழுதிருக்கும் உள்ளூராட்சி அமைப்பின் அதிகாரங்களை பரவலாக்கி அதிகரிப்பது பற்றியே ஆராய வேண்டுமெனவும் இரகசியமாகப் பணிக்கப்பட்டிருந்ததாக தெரிய வருகிறது. வடக்கு கிழக்கு இணைப்பை நிரந்தரமாகத் தடுப்பதற்கு முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கும் இடை இனப்பகைமை உணர்வை தூண்டிவிடக்கூடிய செயல்களை சிங்கள பௌத்த பேரினவாத அரசு தென் தமிழீழத்தில் நடைமுறைப்படுத்தியது. அதேவேளை யாழ். குடாநாட்டில் மனிதாபிமானமற்ற வகையில் பொருளாதாரத் தடைமூலமும் இராணுவப் படுகொலைகள் மூலமும் மனித வதைகளை வரலாறாக்கியது.

இத்தனைக்கு மத்தியிலும் விடுதலைப்புலிகள் அமைதிக்கு மேல் தமக்குள்ள தாகத்தையும், சிறிலங்கா இராணுவ தரை நகர்வுகளை தடுப்பதில் தமக்குள்ள இராணுவ வலிமையையும் உலகிற்குத் தெளிவாக வெளிப்படுத்தினர். தமிழீழ மக்களும் எந்த தடைகளையும் தாங்கி வாழக்கூடிய ஆற்றல் தமக்குண்டென உற்பத்திப் போர்முனை வெற்றியால் நிருபித்தனர்.

தமது இராணுவமும் இராஜதந்திர நரித்தனங்களும் தோல்வியுறுவதைக்கண்ட சிறிலங்கா அரசு அப்பட்டமான ஆக்கிரமிப்பு யுத்தத்தை திடீரென மேலும் அதிகரித்துள்ளது. நவீன குண்டு வீச்சு விமானங்கள் குண்டு மழை பொழிய , தாங்கிகள் கட்டிடங்களை நாசம் செய்ய தொடர்ச்சியான துப்பாக்கிப் பிரயோகத்தினூடு தரை நகர்வதற்கு சிறிலங்கா இராணுவம் பகீரதப் பிரயத்தனம் செய்கிறது. தமிழீழ விடுதலைப்புலிகள் ஒவ்வொரு அடி மண்ணையும் தம் உயிரிலும் மேலாகக் கருதி தற்பாதுகாப்பு யுத்தம் நடத்துகின்றனர். அடுக்கடுக்கான இராணுவத் தோல்விகளைச் சந்தித்த சிறிலங்கா இராணுவம் ஆற்றாண்மையால் குடாநாட்டின் மக்கள் குடியிருப்புகள்மேல் தொடர்ச்சியான எறிகணைத்தாக்குதல்களையும் குண்டு வீச்சுக்களையும் நடாத்துகிறது. ஆயினும் தமிழீழ மண்மீட்புப் போரை புனிதமான வேதமாக ஏற்றுவிட்ட தமிழீழ நெஞ்சங்கள் எதையும் தாங்கி தோற்றம் பெற்றுவிட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசையும் மண்ணின் விடுதலையையும் உலக வரலாற்றில் என்றுமே அழியாது நிலைபெறச் செய்வர் என்பது உறுதியிலும் உறுதி.

இதன் எடுத்துக்காட்டாகவே வானில் ஐயாயிரம் அடி உயரத்தில் பறக்கும் விமானத்தையும் வீழ்த்துகின்றனர். சீறியெழும் அலைகளுக்கு நடுவே கடற்புலிகளாக கடலையும் காக்கின்றனர். இராட்சத வாகனங்களுடனும் நவீன ஆயுதங்களுடனும் கடல்போல் வருகின்ற சிறீலங்கா இராணுவத்தையும் புறங்கொண்டு ஓடச்செய்கின்றனர். இதுவே தீர்வு. தமிழீழமே முடிந்த முடிபு. தமிழீழ மக்களின் வெற்றியை எந்த சக்தியாலும் இனி தடுக்க முடியாது.

# தடைகள் மக்களை மேலும் உறுதியுள்ளவர்களாக்கி உள்ளது!

## ■ தென்னிந்திய திருச்சபையின் யாழ் ஆயர் ■

பொருளாதார இராணுவ ஒடுக்குமுறைகளால் தமிழீழ மக்களின் மன உறுதியை குலைக்கலாம் என சிறீலங்கா அரசு நினைத்து செயற்பட்டு வருகிறது. ஆனால் சிறீலங்கா அரசு எடுக்கும் ஒவ்வொரு முயற்சியும் தமிழீழ மக்களின் உறுதியையே வலுப்படுத்துகிறது என்றார், தென்னிந்திய திருச்சபையின் யாழ். மாவட்ட ஆயர் அம்பலவாணர் அவர்கள் லண்டனில் அளித்த பேட்டியின் விபரம் வருமாறு:- ■

**கேள்வி:** தலைவர் பிரபாகரன் உண்மையாகவே அமைதித் தீர்வில் அக்கறை காட்டுகின்றாரா?

**பதில்:** நான் விடுதலைப்புலிகள் சார்பாகப் பேச விரும்பவில்லை. ஆயினும் நடைபெறும் சம்பவங்களை அவதானித்த தமிழ் மக்கள், இலங்கை அரசுக்கே தீர்வில் அக்கறையில்லை என நினைக்கின்றார்கள். உண்மையில் இலங்கை அரசாங்கம் அர்த்தமுள்ள தீர்வொன்றை முன் வைத்தால் அதனை விடுதலைப் புலிகள் அக்கறையுடன் கவனத்திற்கெடுப்பார்கள் என்றே பொதுவாக மக்கள் நம்புகின்றனர்.

**கேள்வி:** தமிழர்களிடையே விடுதலைப்புலிகளுக்கு எந்தளவு ஆதரவு உண்டு?

**பதில்:** விடுதலைப்புலிகளை ஆதரிக்காதவர்கள் நாட்டை விட்டு வெளியேறி விட்டனர். நாட்டில் இருப்பவர்களில் பெரும்பாலும் எல்லோரும் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களே. துரதிருஸ்டவசமாக நாட்டை விட்டு வெளியேறியவர்களின் அறிக்கைகளையே மேலைத்தேயத்தவர்கள் கேட்கின்றார்கள். ஆனால் இவ் அறிக்கைகள் உண்மை நிலையிலிருந்து எவ்வளவோ விலகியுள்ளன.

**கேள்வி:** என்ன மாற்று வழிகள் உண்டு?

**பதில்:** தமிழர்கள் எத்தனையோ முன்மொழிவுகளை முன் வைத்தபோதும் ஒன்றுமே நடைமுறைப்படுத்தப்படவில்லை. இந்திய-சிறிலங்கா ஒப்பந்தமானது முன் வைக்கப்பட்டது. தமிழர்கள் இதன் அமுலாக்கலைக் கவனமாக அவதானித்து வந்தனர். தீர்வு வழங்குவதாக ஏற்றுக் கொண்டவர்கள் எந்த விதமான சுயாட்சியையும் கூட வழங்கவில்லை. இந்நிலையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் நிலைப்பாடும் பங்குபற்றாமல் விட்டதும் நியாயமான செயற்பாடென்றே மக்கள் கருதுகின்றனர். மாற்று வழி பற்றிய விதங்களை ஆராய்வதற்கு முன்னர் உண்மையில் இலங்கை அரசு அக்கறையுடன் பேச்சுவார்த்தை மேசைக்கு வந்தால் அதன் பின் தானாகவே எல்லா வகையான தீர்வு வழிகளும் ஆராய்வுக்கு வரும். நாம் சிறிலங்கா அரசின் மேல் ஈ"ப்பாடு கொள்கிறோம். ஏனெனில் விடுதலைப்புலிகள் உண்மையாகவே தொண்டமானின் முன் மொழிவுகள் பற்றி அக்கறை கொண்டு கவனத்திற்கெடுத்த போது, சிறிலங்கா அரசு அவசரம் அவசரமாக தொண்டமானின் முன் மொழிவுகளைக் கைவிட்டு விட்டது. இதைக் குறித்து நாம் சொல்லக் கூடிய ஒரேயொரு விளக்கம் என்னவென்றால், அந்த முன் மொழிவுகளில் காணப்பட்ட சிறிய முன்னேற்றகரமான கருத்துக்களைக் கூட பின்னால் நடைமுறைப்படுத்த விரும்பாத காரணத்தாலேயே அதைத் தூக்கி வீசியது என்பதேயாகும்.

**கேள்வி:** பாராளுமன்ற தெரிவுக் குழுவின் செயற்பாடு பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?

**பதில்:** பாராளுமன்றத் தெரிவுக் குழுவை கவனமாக அவதானித்த நம்மவர்கள், அதனை இராணுவத் தீர்வுக்கு மேலும் கால அவகாசம் பெறுவதற்கான, திருவிளையாடல் என்றே கருதுகின்றார்கள்.

**கேள்வி:** தமிழ் மக்கள் களைப்படைந்து படிப்படியாக தேசிய விடுதலைப் போராட்டத்தை கைவிட மாட்டார்களா?

**பதில்:** மின்சாரமோ, உணவு, மருந்து உட்பட எவ்வித வழங்கல்களோ, இல்லாத நிலையில் கூட மக்கள் தம்மால் வாழ முடியும் என மிகத் தெளிவாகக் காட்டி விட்டனர். இந்நிலையில் அவர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட தடைகள் கஸ்டங்கள் அவர்களை மேலும் உறுதி பெறவே செய்துள்ளது. அத்துடன் யுகோஸ்லவக்கியாவில் என்றதும் அவசர அவசரமாக உடன் தீர்வு காண விரும்பும் மேலைத்தேயம், ஏன் தாம் இரண்டு வருடங்களாக துன்பப்பட்ட போதும் அதைக் கவனத்திற்கே எடுக்கவில்லை எனத் திகைக்கின்றனர்.

**கேள்வி:** ராஜீவ்காந்தியின் கொலை பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?

**பதில்:** விடுதலைப்புலிகள் தொடர்ந்து மறுத்து வருகின்றனர். இந்தியா நீதி விசாரணை ஒன்றை தொடங்கியுள்ளது. ஆயினும் இதுவரை அத்தாட்சிப்படுத்த போதுமான சாட்சியம் எதுவும் வெளியாகவில்லை. நாம் விடுதலைப்புலிகளை இப்பொழுது குற்றம் சாட்டாது, நீதியின் முடிவு எப்படி உள்ளது எனப் பொறுத்திருந்து பார்ப்பது நல்லது.

# சிறிலங்கா இராணுவத்தினர் உளப் போராட்டத்தில் தவிப்பு!

## ■ பலர் தற்கொலை.

சிறிலங்கா இராணுவத்தினர் உளப் போராட்டத்தில் சிக்கித் தவிப்பதை கொழும்பு இராணுவ வட்டாரச் செய்திகள் ஊர்ஜிதம் செய்துள்ளன.

விடுமுறையில் தமது வீடுகளுக்குச் சென்ற இராணுவத்தினர் பலர் தற்கொலை செய்து தம் உயிரை மாய்த்துக் கொண்டுள்ளனர். வேறு பலர் இராணுவ முகாம்களிலேயே தமக்குத் தாமே சுட்டு காயம் விளைவித்து விடுமுறையில் செல்கின்றனர்.

இது ஒரு புறமிருக்க இராணுவத்தினர் இறப்பு பற்றிய உண்மை விபரத்தை மறைக்கும் சிறிலங்கா அரசு, இவர்களைக் காணாமல் போனதாகவே பதிவு செய்கிறது. இவ்விதம் பதிவு செய்து விட்டு தொடர்ந்து சம்பளம் வழங்கிவரும் சிறிலங்கா அரசு சிங்கள மக்கள் விரக்தியால் எதிர்ப்புரட்சியில் இறங்கலாம் என்ற அச்சத்தில் புலிகளின் ஊடுருவலைத் தடுத்தல் என்ற போர்வையில் தென்னிலங்கை முழுவதையும் தனது ஆயுதப்படையினால் கட்டுப்படுத்தக் கூடிய அளவுக்கு பெருந்தொகையான இராணுவ-பொலிஸ் முகாம்களை அமைத்து வருகிறது.

### தளபதிகள் நேரில்

இதற்கிடை வெற்றிலைக்கேணியில் இராணுவத்தினர் தாம் சிறிலங்கா அரசின் ஆக்கிரமிப்பு வெறிக்கு வீணே பலியாவதாக கடும் மனச் சோர்வடைந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனால் இராணுவத்தினரை உற்சாகப்படுத்தும் வகையில் சிறிலங்கா இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்னா, கடற்படைத் தளபதி கிளன்ஸி பெர்ணான்டோ ஆகியோர் நேரடியாகவே ஆனையிறவுக்கு வந்து உள்ளனர்.

கொழும்பில் பெருந்தொகையான சம்பளமும் பல கவர்ச்சிகரமான சலுகைகளையும் வழங்குவதன் மூலம் ஏற்படும் இழப்புகளுக்கு ஆட்சேர்க்கும் முயற்சியில் சிறிலங்கா அரசு ஈடுபட்டுள்ளது.

## வீரச்சாவு

### மேஜர் குலதீபன் வீரவேங்கை தயாநிதி

மட்டக்களப்பு குடாவெட்டை என்னும் இடத்திற்கு இயக்க வேலை தொடர்பாக சென்று திரும்பிக் கொண்டிருந்த விடுதலைப்புலிகள் மீது சிறிலங்கா இராணுவத்தினர் லவணை என்னுமிடத்தில் பதுங்கியிருந்து தாக்கினர். இத் தாக்குதலின் போது இரண்டு போராளிகள் வீரச்சாவை தழுவிக் கொண்டனர். மேஜர் கலதீபன் (நாகலிங்கம் சச்சிதானந்தம்-களுவாஞ்சிக்குடி, மட்டக்களப்பு) வீரவேங்கை தயாநிதி (சின்னத்தம்பி கலாநிதி-அம்பிலாந்துறை, மட்டக்களப்பு) ஆகியோரே இச் சம்பவத்தில் வீரச் சாவைத் தழுவிக் கொண்டவர்களாவர். வீரச்சாவைத் தழுவிக் கொண்ட இந்த இரு வேங்கைகளுக்கும் விடுதலைப்புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ...ான்கு அம்சத்திட்டத்தால் கூட்டணியின் தெளிவின்மை மீண்டும் வெளியானது!

...ங்கா ஜனாதிபதியைச் சந் ... தமிழர் கூட்டணியினர் ... அம்சத் திட்டமொன்றை ... துள்ளதாக கொழும்புச் ...கள் தெரிவிக்கின்றன.

...த்திட்டம் (1) ஐக்கிய இலங் ...கையின் கீழ் தீர்வு (2) வெறும் ...காணசபை வடிவிலான அதி ...ாரப் பரவலாக்கம் (3) முஸ்லீம் ...ளுக்கு என ஒரு சபையை ...ருவாக்குதல் (4) வடக்கு-கிழக் ...ில் வாழும் சிங்களவர்களுக்கும் தமிழர்க்கு தென்னிலங்கையில் ...ள்ளது போன்ற உரிமைகளை ...கொடுப்பது என்ற நான்கு பிரிவு களை கொண்டுள்ளது.

தமிழீழத்தை தமது தேர்தல் கோரிக்கையாக வைத்து கூட் டணி கேலிக்கூத்து விளையா டியதா? என தமிழீழ மக்கள் கேட்குமளவுக்கு இந்த நான்கு அம்சத்திட்டம் அமைந்துள்ளது. அத்துடன் தமிழரின் தாயகம், தமிழ்த் தேசியம் என்பனவற்றை மறுக்கும் செயலாகவும் சுயநிர் ணய உரிமையை விட்டுக் கொ டுக்கும் வகையிலும் இந்த தீர்வு முன்வைக்கப்பட்டுள்ளது. தமி ழீழம் பல்லின மக்கள் தொகுதி யைக் கொண்டது. தமிழ்ப் போராட்டம் தேசிய விடுதலைப் போராட்டம் அல்ல. சிறு பான்மை, பெரும்பான்மை இனப் பிரச்சினை என்ற சிறிலங்கா அரசின் சிந்தனைகளை வலியு றுத்தும் வகையில் இது காணப் படுகிறது. அத்துடன், இந்திய அரசின் அதிகாரப் பரவலாக்கல் மூலம் தமிழீழப் போராட்டத்தை மழுங்கடிக்க வேண்டுமென்ற கருத்தையும் இது வலியுறுத்து கிறது. இந்திய அரசின் அடிவ ருடிகளாகவும் சிங்கள அரசின் நண்பர்களாகவும் உள்ள கூட்ட ணியினர் தமிழீழ மக்கள் பிரச் சினைக்கு எவ்விதம் தீர்வு காணலாம் என தமிழீழ மக்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

# யுத்தத்தை நிறுத்தக் கோரி ஓசைப் போராட்டம்!

சிறீலங்கா அரசின் எதிர்க் கட் சிகள், சிங்களப் பிரதேசமெங் கும், வடக்கு-கிழக்கு யுத்தத்தை நிறுத்தக் கோரி "ஓசைப்" போராட்டம் நடாத்தினர். மாதம் 30 கோடி ரூபா யுத்தத்திற்காக செலவிடப்படுவதாகவும் ஆயிரக் கணக்கான சிங்கள இராணுவத் தினர் இத்தேவையற்ற யுத்தத் தால் பலியாகி விட்டதாகவும், சிறிலங்காவின் சிங்கள மக்க ளிடை இவை எடுத்துக் கூறின. சரியாக 12. 35 முதல் 12. 50 வரை தெருக்களில் இறங்கி கைகளைத் தட்டியும், வாகன கோன்களை அழுத்தியும், மணிகளை அடித்தும், டேப்ரெ கார்ட்டர்கள், ஒலிபெருக்கிகள் ஆகியவற்றை மிகப் பலமாகப் போட்டும் இப்போராட்டம் நடாத் தப்பட்டது. சுமார் 15 நிமிடங்கள் ஒரே இரைச்சலாகவே இருந்த தாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# போர்ச்சூழலிலும் தென்தமிழீழ அறிஞர்க்கு யாழ் மாநகரசபை விழா

...மிழீழ மக்கள், மரணத்தை ...ங்கண்ட கடமை வீரர்கள் என் ...ற்கு உதாரணமாக போர்ச்சூ ...லுக்கு மத்தியிலும் யாழ் மாந ...சபை சுவாமி விபுலானந்தர் ...றாண்டு விழாவை சிறப்பா ... கொண்டாடியது.

...நூற்றாண்டு விழா தொடர் ... மூன்று நாட்கள் புத்தக ...ண்காட்சி ஒன்றும் இடம்பெற் றது. சைவசமயத் தொண்டரும், தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலய நம்பிக்கைச்சபை தலை வியுமான செல்வி தங்கம்மா அப் பாக்குட்டி இப் புத்தகக் கண் காட்சியைத் திறந்து வைத்தார். யாழ் மாநகர சபையின் நல்லூர் நூலக கட்டிடத்தில் நடைபெற்ற இப்புத்தகக் கண்காட்சியில் விபுலானந்தரின் நூல்களும் ஆக் கங்களும் பார்வைக்கு வைப்பட் டிருந்தன.

மேலும் நல்லூர் நாவலர் கலாச் சார மண்டபத்தில் விபுலானந்த ரால் இயற்றப்பட்ட பாடல்கள், பேச்சுக்கள் என்பன இடம்பெற் றன. இவ்விழாவும் மூன்று தினங்களாக நடைபெற்றன.

தென்தமிழீழத்தின் பெரும் அறி ஞருக்கு தமிழீழ மக்கள் எடுத்த நன்றி நினைவு விழாவாக இது அமைந்தது.

# இலங்கை வங்கி நகைகள் இராணுவத்தால் கொள்ளை

முல்லைத்தீவு இலங்கை வங்கியில் மக்கள் அடைவு வைத்திருந்த நகைகள் பாதுகாப்பு காரணங்களுக்கு என முல்லைத்தீவு இரா ணுவ முகாமிற்கு 11. 06. 1990 இல் கொண்டு செல்லப்பட்டது. இதில் 7,000,00 ரூபா பணமும், பெறுமதி மதிக்கப்படாத பெருந் தொகையான நகையும் இராணுவ அதிகாரிகளினால் அபகரிக்கப் பட்டுள்ளன. இதனால் இலங்கை வங்கி, மக்கள் வங்கி ஆகியவற் றில் விவசாய கடனுக்காக நகைகளை அடைவு வைத்த நூற்றுக்க ணக்கான தமிழர்கள் தமது நகைகளை இழக்கும்நிலை ஏற்பட்டுள் ளது.

வெறும் கண் துடைப்பாக இரண்டு இராணுவ லெப்டினன்களும், எட்டு இராணுவத்தினரும் இது தொடர்பாக கைது செய்யப்பட்டிருப் பதாக இலங்கை அரசு அறிவித்துள்ளது. ஆயினும் மக்களுக்கு நஸ்டஈடு வழங்குவது பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

# புலிகளுக்குப் பயந்து நீதிமன்றத்தில் கெஞ்சல்

சிறிலங்கா இராணுவத்தைச் சேர்ந்த மேஜர் எம். ஆர். விஜயசுந் தர தம்மை வடக்கு கிழக்கு யுத்தமுனைக்கு அனுப்பவேண்டாம் என இலங்கை உயர் நீதிமன்றத்திடம் கெஞ்சினார். புலிகளுக்குப் பயந்து தமக்கு சுகயீனம் எனவும் அங்கு செல்லமுடியாது எனவும் வாதிட்டார், ஆயினும் இந்த மனுவை விசாரித்த உயர்நீதிமன்றம் அவரது விருப்பத்திற்கு மாறாக தெல்லிப்பளைக்குப் போகவேண் டும் என உத்தரவு இட்டது.

# மோகனதாஸ் கூறிய "அலன்" விவகாரம்

## ■ இந்தியாவின் ஆயுத அச்சுறுத்தல் அம்பலம்

**1984ம்** ஆண்டில் யாழ்ப்பா ...ாத்தில் அமெரிக்காவைச் ...சர்ந்த அலன் தம்பதிகள் கடத் ...தப்பட்டமையும் பின்னர் விடுவிக் ...கப்பட்டமையும் வாசகர்களுக்கு ...நினைவிருக்கும். இச்சம்பவம் ...தொடர்பான திடுக்கிடும் தகவல் ...ன்றை தமிழக முன்னாள் பிரதி ...பாலிஸ் மா அதிபர் மோகன தாஸ் வெளியிட்டுள்ளார்.

இக்கடத்தலில் சம்பந்தப்பட்டவர் களின் தலைவர்கள் மூவரை சென்னையில் ஆயுதமுனையில் தான் வெருட்டியதன் விளைவா கவே அலன் தம்பதிகளை விடு விக்கும்படி அவர்கள் கட்டளை யிட்டதாக திரு. மோகனதாஸ் தெரிவித்துள்ளார் "யாழ்ப்பாணத் திலுள்ள அலன் தம்பதிகளை உடன் விடுதலை செய்யுமாறு யாழ்ப்பாணத்திலுள்ள உங்கள் நண்பர்களுக்கு கூறுங்கள். அவ் வாறு நீங்கள் சொல்லாவிடின் அவர்கள் எத்தனை மணிக்குச் சுடப்படுகிறார்களோ அதற்கு மறுகணமே நீங்களும் இங்கே சுடப்படுவீர்கள்" எனத் தான் அவர்களிடம் கூறியதாக மோகனதாஸ் கூறியுள்ளார். இந்த அச்சுறுத்தலுக்கு அஞ்சிய அவர்கள் "எல்லாம் குணமாகி விட்டது முழுமையாக குணமா கிவிட்டது. நோயாளரைப் போகச் சொல்லலாம்" எனச் சங் கேத மொழியில் கூறியதன் பின்பே அலன் தம்பதிகள் விடு விக்கப்பட்டனராம்.

மோகனதாஸ் வெளியிட்டுள்ள இவ் உண்மையின் மூலம் இந் தியா ஆயுத அச்சுறுத்தலை, தமிழீழப் 'பிரச்சனையில் கையாளவேண்டுமென்ற எண் ணத்தை 1984 லேயே தெளிவாக கொண்டிருந்தது என்பது வெளியாகியுள்ளது. அவ்வாறே, விடுதலைப் போராட்டத்துக்கென புறப்பட்டதாக கூறிக்கொண்ட சிலர் எவ்வளவு தூரம் கோழை களாக உயிருக்கு அஞ்சி முடி வெடுக்கும் கும்பல்களாக வாழ்ந் தனர் என்பதையும் படம் பிடித் துக் காட்டியுள்ளது.

இதேபாணியில் 1986ல் பெங்களூ ரில் "சார்க்" மாநாடு நடைபெற இருந்த வேளையில் அப்போது சிறிலங்கா ஜனாதிபதியாக இருந்த ஜே. ஆர். ஜயவர்த் தனா இந்தியாவுக்கு வருவதை முன்னிட்டு, தமிழகத்தில் 31 முகாம்களில் தங்கியிருந்த விடுதலைப்புலிகளிடம் இருந்து ஆயுதங்களை தமிழக அரசு பறிமுதல் செய்தது.

இதையடுத்து தலைவர் வேலுப் பிள்ளை பிரபாகரன், ஆயுதங் களை திருப்பித்தரும்வரை உண் ணாவிரதத்தை ஆரம்பித்தார். இப் போராட்டத்தால் வெலவெ லத்துப்போன தமிழக-இந்திய அரசுகள் பறிமுதல் செய்த 40-கோடி ரூபா பெறுமதியான ஆயு தங்களையும் திருப்பி வழங்கி னர். எனவும் மோகனதாஸ் கூறியுள்ளார். இதன்மூலம் தமி ழீழ விடுதலைப்புலிகளின் தலைமைப்பீடம் கொள்கைக்காக உயிரையும் தியாகம் செய்யும் அர்ப்பணிப்பு நிறைந்தது என்ற உண்மையும் உலகுக்கு நிருபிக் கப்பட்டுள்ளது.

# கொழும்பில் துரோகக்குழு ஒன்றின் பொலிஸ் நிலையம் மூடப்பட்டது.

கொழும்பில் தமிழ் மக்களை கடத்தியும், பயமுறுத்தியும் பணம் சேர்த்து வந்த தமிழ் துரோகக்குழு ஒன்றினால் தன்னிச்சையாக நடாத்தப்பட்டு வந்த இரகசிய பொலிஸ் நிலையம் சிறிலங்கா பொலிசாரினால் மூடப்பட்டது. பம்பலப்பிட்டியில் உள்ள வீடொன் றில் இயங்கிய தமிழ் துரோகக்குழுவினருக்கும் சிறிலங்காப் பொலிசாரிற்கும் அபகரித்த பணத்தை பகிர்ந்து கொள்வதில் ஏற்பட்ட சிக்கலே இப்பொலிஸ் நிலையத்தின் மூடு விழாவிற்கு காரணமாயிற்று.

# பாரிஸில் கண்டன ஒன்று கூடல்

பாரிஸ் மாநகரில் "இன்வலிட்" மைதானத்தில் புலம்பெயர்ந்த தமிழர்கள், தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தை இந்தியா தடை செய்ததையும், தமிழீழத்தில் தமிழ் மக்கள் சிறிலங்கா இராணுவத்தால் கொல்லப்படுவதையும் ஆட்சேபித்து கண்டன ஒன்று கூடல் நடாத்தினர். பலநூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட கண்டன ஒன்று கூடல் வைபவம் சுமார் இரண்டரை மணி நேரம் வரை நடந்தது. கண்டன ஒன்று கூடலின் முடிவில் பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சின் இரண்டாவது செயலாளரிடம் மகஜர் ஒன்றையும் புலம்பெயர்ந்த தமிழர்கள் கையளித்தனர்.

# பொது மக்களின் உடமைகள் வீடுகள் பெருமளவில் நாசம் !

வலிகாமம் வடக்கு மற்றும் மேற்குப் பகுதிகள் மீது சிறிலங்காப் படையினர் நடத்திய குண்டு வீச்சுக்களினால் பொது மக்களின் சொத்துக்கள் உடைமைகள் பெருமளவில் நாசமாகின. சுமார் 300 வீடுகள், ஆலயங்கள், பொது நிறுவனக் கட்டிடங்கள், வாகனங்கள் என்பனவும் சேதமடைந்தன. வட்டுக்கோட்டை கிழக்கில் மாவடி-சித்தங்கேணி வீதியடியில் இந்துக்கல்லூரிக்குச் சமீபமாக இடம் பெற்ற விமானக் குண்டு வீச்சில் இரு வீடுகள் சேதமடைந்தன. பயன்தரு மரங்கள் நாசமாகின. கால் நடைகள் பலியாகின. பல பொதுமக்கள் காயமடைந்தனர். சுழிபுரம் தபாலகத்துக்கு முன்னால் வீசப்பட்ட இரு குண்டுக்ளினால் பல வீடுகள் சேதமடைந்தன. மானிப்பாய் சந்தைப் பகுதியில் கெலி வீசிய கிரனேட்டினால் பலர் காயமடைந்தனர். சில கட்டடிடங்கள் சேதமடைந்தன. சுழிபுரம்-மாதகல் ...ம்பில்துறைப் பகுதியிலும் கெலியிலிருந்து குண்டுகள் வீசப்பட்டன. சித்தங்கேணி, சுழிபுரம், மாதகல், சில்லாலை, பண்டத்தரிப்பு பகுதிகளில் நடத்தப்பட்ட விமானக் குண்டு வீச்சுக்களினால் கட்டிடங்கள், மதில்கள் சேதமடைந்தன. இளவாலை ஆனைவிழுந்தான் பிள்ளையார் கோவில், மயிலங்கூடல் ஞான வைரவர் ஆலயம், இளவாலை மெய்கண்டான் வித்தியாலயம், சென். கென்றீஸ் கல்லூரி ஆகியனவும் சேதமடைந்தன. விளான் சந்தையடியில் இரண்டு வீடுகள் குண்டு வீச்சால் சேதமடைந்தன. குண்டுத் தாக்குதல்களினால் அளவெட்டி, மல்லாகம், சுன்னாகம் ஆகிய பகுதிகளில் பொது மக்களின் உடைமைகளுக்குப் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது. மல்லாகம் நீதிமன்றப் பகுதியில் வீசப்பட்ட ஐந்து குண்டுகளினால் அங்கு பல கட்டிடங்கள் நாசமாகின. நீதிமன்ற அகதிமுகாம் பெரும் பாதிப்புக்குள்ளானது. அளவெட்டி கணேஸ்வரத்தில் வீசப்பட்ட குண்டுகளில் ஒன்று வெடிக்கவில்லை. சுன்னாகம் சந்தைப் பகுதி, சுன்னாகம் இரயில் நிலையத்திற்கு அருகிலுள்ள சில வீடுகள் சுன்னாகம் தேசிய சேமிப்பு வங்கிக்கு அருகிலிருந்த சில கட்டிடங்கள் சுன்னாகம் ஐயனார் கோவிலடியிலிருந்த பல கடைகள் ஆகியன பலத்த சேதமடைந்தன.

# "அரசு மக்கள் மீதான குடியியல் உரிமையை இழந்துவிட்டது"

அரசாங்கம் மக்கள் மீது பொருளாதாரத்தடை, யுத்த நடவடிக் கைளை இறுக்கிக் கொள்ளும் இந்த நேரத்தில் மக்கள் மீதான குடியியல் உரிமைகளையும் அரசாங்கம் இழந்து போனது.

இவ்வாறு யாழ். பல்கலைக்கழக பொருளியல் மண்டபத்தில் நடைபெற்ற '1990 யூன் யுத்தமும் அதன் பின்னர் ஏற்பட்ட யாழ்ப் பாண மக்களின் சமூக பொருளாதார மாற்றமும்' என்ற தலைப்பில் யாழ். செயலகத்திட்ட உதவிப் பணிப்பாளர் செவ்வின் குறிப்பிட் டார்.

அவர் மேலும் பேசியதாவது: இந்த நேரத்தில் போரின் வளர்ச்சி தொடர்ந்த போது அந்தப் போரின் நிலையினை ஊகித்து அதற் கேற்ற வகையில் மக்களை வழிப்படுத்தவோ மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய சேவைகள் தங்கு தடையின்றி நடை பெற உத்தரவாதப்படுத்தவோ, அரசாங்க நிர்வாக இயந்திரம் தன்னைப் பூரணமாக ஈடுபடுத்த முன்வரவில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அமைதிக்குப் பங்கம் விளைவிக்கு இந்திய ராஜதந்திரம்

**தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் மீது தடைவிதித்ததன் மூலம் இந்திய ராஜதந்திரம் கொழும்பு அரசியல் உலகில் மிகவும் சிக்கலான எதிர்விளைவுகளை உண்டுபண்ணியுள்ளது. இந்த ராஜதந்திர நடவடிக்கை ஏற்படுத்தியுள்ள சந்தேகங்களையும் அச்சங்களையும் ஆபத்துக்களையும் எடுத்து விளக்குகிறது 'இந்து' பத்திரிகையில் வெளியாகிய இந்தக் கட்டுரை.**

புலிகள் இயக்கத்திற்கு இந்தியாவில் தடை விதிக்கப்பட்டதன் பின்னர் இலங்கையில் இந்திய ராஜதந்திரம் மிகவும் சிக்கல் வாய்ந்த நிலைமை ஒன்றை எதிர்நோக்குகின்றது. இலங்கையின் வடக்கு-கிழக்கில் சமாதானம் அமைதியை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளைக் குலைப்பதாக கொழும்பினால் குற்றம் சாட்டப்படக் கூடிய ஒரு அபாயத்தை புதுடில்லி எதிர்நோக்குகின்றது.

வடக்கு-கிழக்கில் அமைதியை ஏற்படுத்துவதற்கு இலங்கையில் மேற்கொள்ளப்படும் அரசியல் நடவடிக்கைகள் தோல்வியடையுமிடத்து அதற்கான பொறுப்பு இந்தியாவே என்று சாட்டுக் காட்டப்படக்கூடிய சூழ்நிலையை தவிர்த்துக் கொள்வதை உறுதி செய்வதும் பிரேமதாசாவின் உள்நாட்டுப் பிரச்சனைகளுக்குப் பொறுப்பான 'வில்லன்' இந்தியாவே என்ற குற்றச்சாட்டிலிருந்து தப்பிக் கொள்வதை உறுதி செய்வதுமே இந்தியக் கொள்கையை இன்று எதிர்நோக்கும் பாரிய ராஜதந்திர சவால்களாகும்.

புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடாத்துவதன் மூலமாக அவ்வியக்கத்திற்கு சட்டபூர்வமான தன்மை ஒன்றை கொடுக்க வேண்டாமென்ற தொனியில் இந்தியா சூசகமாகத் தெரிவிக்கும் கருத்துக்கள் சமாதான முயற்சிகளை முறியடிப்பதற்கும் பிரேமதாசா நிர்வாகத்தை உறுதி குலையச் செய்வதற்கும் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் என்றே நோக்கப்படுகின்றன.

இலங்கை அரசாங்கத்தை பலவீனப்படுத்தும் முயற்சியாக சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், காமினி திசாநாயக்கா மற்றும் லலித் அத்துலத் முதலி தலைமையிலான அதிருப்தியாளர் குழுவிற்கும் இந்தியா ஆதரவு தருகின்றது என்று அரசாங்கத்துக்குள் இருக்கும் சில பிரிவினர் நம்புகிறார்கள் போலத் தெரிகிறது. எதிரணிக்கு இந்தியா தருவதாகக் கூறப்படும் இந்த ஆதரவும் புலிகள் மீதான இந்தியாவின் தடையும் பிரேமதாசா அரசாங்கத்தை வீழ்த்துவதற்கான ஒரு சதித்திட்டத்தின் அங்கமாகவே நோக்கப்படுகின்றன.

## தெரிவுக்குழு விவகாரம்

புலிகள் மீதான தடையின் மூலமாக இலங்கைப் பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் செயற்பாட்டைச் சீர்குலைக்க இந்தியா முயற்சிக்கின்றது என்பது பத்திரிகைகள் வாயிலாக கிளம்பும் இன்னொரு குற்றச்சாட்டாகும். கொழும்பு புலிகளைத் தடை செய்யாது. ஏனென்றால், பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் செயற்பாட்டை இது பாதிப்பதை அரசு விரும்பவில்லை என்று அரசாங்க வட்டாரம் ஒன்று அரசாங்கப் பத்திரிகையில் கூறியிருக்கின்றது. பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு முன்பாக புலிகள் தோன்ற வேண்டுமென்று அரசாங்கம் விரும்புகின்றது: புலிகளைத் தடைசெய்வதால், அதைச் சாட்டாக வைத்தே புலிகள் தெரிவுக்குழு முன் வராமல் விடுவர் என்று பெயர் குறிப்பிடாத அரசாங்க அதிகாரி ஒருவர் கூறியிருக்கிறார்.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் செயற்பாட்டில் புலிகள் சம்பந்தப்படாததற்கும் இந்தியா புலிகள் மீது விதித்த தடைக்கும் எதுவித தொடர்பும் இல்லையென்பது தெளிவானதாகும். அரசாங்கம் அதன் யோசனைகளை முதலில் முன் வைக்காதவரை தாங்களும் எந்தவொரு யோசனைத் திட்டத்தையும் தெரிவுக்குழுமுன் வைக்கப் போவதில்லை என்று புலிகள் அறிவித்து விட்டார்கள்.

இலங்கை அரசாங்கம் எந்தவொரு யோசனையையும் தெரிவுக்குழுவுக்கு முன்வைக்கவில்லை. இதற்குக் காரணம் எதிர்க் கட்சியின் அரசியல் தாக்குதலுக்கு இலக்காகும் அபாயம் உண்டு என அரசு உணர்வதே. எவ்வாறெனினும், தெரிவுக்குழுவின் செயற்பாடுகளில் புலிகளை சம்பந்தப்படுத்த முடியாமல் இருப்பதற்கு ஒரு "பலிக்கடா"வாக இந்தியாவை காட்டக் கூடிய சாத்தியப்பாடுகள் இருக்கின்றன.

## வசதியான இ

இலங்கை அரசாங்க எதிர்நோக்கப்படும் பாரிய சவால்களுக்கால தைச் சுமத்துவதற்கா யான இலக்காக" இந்திய மாறக்கூடிய சூழ்நிலை ஒன் இருக்கிறது. வடக்கு-கிழக் நெருக்கடியை அரசியல் ரீதிய கவோ அன்றி இராணுவ ரீதிய கவோ தீர்த்து வைப்பதில் எதி நோக்கப்படும் அதிகரித் கலும் எதிர்க்கட்சியினர் அதிருப்தியாளர்கள் ம அதிகரிக்கும் நம்பிக்கையும் சாங்கத்தை வெகுவாகப் பா கின்றது.

இலங்கையில் உள்நாட்டு சியலில் இந்தியா சிக்குப் எவ்வளவு இலகு என்ப கடந்த ஒரு தசாப்த கால அ பவம் தெளிவாகக் காட்டுக் றது. இவ்வாறு சிக்குப்பட்ட தர்ப்பங்களில் எல்லாம் தவி முடியாமல் இந்தியா அத ரலைச் சுட்டுக் சொண்டது பது அனுபவத்தின் மூலம் தெ கிறது.

இலங்கையின் சமாதான சிகளைச் சீர்குலைக்கும் நாடாக இந்தியாவைக் காட் வது ஒப்பீட்டளவில் வெகு குவான ஒன்றாகும்.

ஏனென்றால், அண்மைக்கா மாகப் புலிகளுடனான விடயத்தில் இந்தியா சமிஞ்ஞை சகலதுமே றையானதாக இருந்ததே. சம தான முயற்சிகள் தொடர்ந் நகர்வதற்குச் செய்யக்கூடி காரியங்கள் குறித்து எந்தவெ நேர்மறையான அபிப்பிராய ளும் தெரிவிக்கப்பட்டதா இல்லை. தீர்வுக்கான சம முயற்சிகளை இன்னமு டில்லி ஆதரிப்பதாகத் தெ பதன் வாயிலாக மேற் பட்ட எதிர்மறையான ஞைகளைச் சமப்படுத்த முடியு என்று சில அரசியல் அவதான கள் தெரிவிக்கின்றார்கள். எனினும் கடந்த ஒரு தசாப்த காலமாக இந்திய-இலங்கை உறவுகளில் ஒரு பிரத்தி மான நிலையான அ ஒன்றை, மறந்து சந்தேகக் ணோடு பார்த்தது என்ப வேறு சில அவதானி நினைவுப்படுத்தத் த வில்லை.

இந்தியாவின் தரப்பில் மேற்கொள்ளப்படக் கூடிய எந்தவொரு சமாதான முன் முயற்சியும் மீண்டும் இலங்கையின் உள் விவகாரத்திலான தலையீ கவே நோக்கப்படுவது சாத்தியம்.

## ஒப்பரேசன் 'மாருதி' தோல்வி கண்டவிதம்

**- தமிழீழத்திலிருந்து நேரடிக்கடிதம் -**

**அன்புள்ள களத்தின் ஆசிரியர் அவர்கட்கு,**

எமது மண்மீட்பு போரை ஒடுக்கவேண்டுமெனும் நோக்கில் பொருளாதாரத் தடைகளாலும் இராணுவ நடவடிக்கைகளாலும் எமது மண்ணையும் மக்களையும் அழிக்கத்துடிக்கிறது சிறிலங்கா அரசு.

ஆயினும் சிறிலங்கா அரசுக்கு எதிராக மக்கள் தமிழீழவிடுதலைப் புலிகளுடன் சேர்ந்து தர்மயுத்தம் நடாத்தி வருகின்றனர். சத்தியத்தை அழிக்கமுடியாது என்பதற்கு சிறந்த உதாரணமாக தமிழீழப்போர் காணப்படுகிறது.
அண்மையில் ஒப்பரேசன் 'மாருதி' என்ற பெயரில் பலாலி இராணுவ முகாமிலிருந்தும் ஏழு சுற்று என்னும் பெயரில் முல்லைத்தீவு பகுதியிலும் பலத்த தாக்குதலை இராணுவம் ஆரம்பித்தது.

பெரும் அதிர்வுகளையும் இரைச்சல்களையும் ஏற்படுத்தும்சீன சுப்பர் சொனிக் ஜெட் விமானங்களையும், செக்கோஸிலவக்கியா டாங்கிகளையும் பயன்படுத்தி மக்களை அச்சத்திற்குள்ளாக்கி உளவியல் போருக்குள் சிக்கவைக்க முயற்சிக்கின்றனர்.

ஆயினும் சிறிலங்காவின் இராணுவ தந்திரங்களை எல்லாம் தவிடு பொடியாக்கக் கூடிய முறையில் இராணுவம் முன்னேறும் பகுதிகளை இனங்கண்டு அதற்கேற்ப தமது தாக்குதல்களை புலிகள் யூகப்படுத்திக்கொண்டனர்.

இதனால் பலாலியில் இருந்து புறப்பட்ட இராணுவத்தில் 86பேர் பலியானதுடன் 150 பேர் வரை படுகாயமடைந்தனர். ஆத்திரமுற்ற இராணுவம் தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயத்தை குண்டு வீசித்தாக்கியது. இதில் வசந்த மண்டபம், களஞ்சிய அறை, குருமார் குடியிருப்பு, ராஜகோபுரம் உட்பட கோயிலின் கட்டிடங்கள் பல சேதமடைந்தன. அருகிலிருந்த துர்க்கை அம்மன் அனாதை இல்லமும் வெகுவாக சேதமடைந்தது. இதில் இருந்த அனாதைக் குழந்தைகளை இராமநாதன் கல்லூரியில் தங்கவைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இத் தாக்குதலில் கோயிலில் தஞ்சமடைந்திருந்த 5 அகதிகள் உயிரிழந்தனர். கூட்டுப்படைத் தலைமையகத்திடமிருந்து படைத்தளபதிகளுக்கு அதிகாரங்கள் மாற்றப்பட்டதன் பின்னர் நடைபெற்ற இம்முதலாவது இராணுவத் தாக்குதல் படுதோல்வியில் முடிந்தது.

சிறிலங்கா கடற்படைத்தளபதி கிளான்ஸி பெர்ணான்டோ, விமானப்படைத் தளபதி ரெறன்ஸ் குணவர்த்தனா, இராணுவத்தளபதி சிசில் வைத்யரத்னா ஆகிய முப்படைத் தளபதிகளுமே தலைமைதாங்கியும் இராணுவத்தால் தரை நகரமுடியவில்லை.

இதையடுத்து முல்லைத்தீவு களத்திலும் தோல்வி கண்டது இலங்கை இராணுவம். அங்கும் வற்றாப்பளை அம்மன் கோவில் முதலில் தாக்கப்பட்டது. இவற்றைப் பார்க்கும் பொழுது மக்களை பொது இடத்தில் கூடவைத்து உயிர்குடிக்கும் புதிய சதித்திட்டமாகவே கோயிற் தாக்குதல்களை எடுத்து நோக்கவேண்டியுள்ளது.

15 போர்ப்படைப் பிரிவுகளையும் கவசவாகனபிரிவு, பொறியியல் சிக்னல்பிரிவு, விமானப்படை, கடற்படை பிரிவுகள் என ஒரு பெரிய இராணுவக் கட்டமைப்பையே வைத்துக் கொண்டு மக்களை படிப்படியாக அழிக்க முயல்கிறது இராணுவம். 10. 06. 19-92 அன்று தெல்லிப்பளை, சண்டிலிப்பாய், மாகியப்பிட்டி, சங்கானை போன்ற பகுதிகளில் மக்கள் குடியிருப்புகள் மேல் நடாத்தப்பட்ட விமானத்தாக்குதலில் ஏழு பேர் ஸ்தலத்திலேயே உடல் சிதறிப் பலியானார்கள் 15 பேர் படுகாயமடைந்தனர்.

இந்த கேவலமான மனிதாபிமானமற்ற தாக்குதல்கள் குடாநாடு முழுவதும் தொடர்கிறது. ஆயினும் உயிர் மூச்சிலும் உயர்ந்தது சுதந்திரமூச்சு என்ற உறுதியுடன் வாழ்ந்து பழகிய மக்களுக்கு மரணம் என்பது விடுதலை வரலாற்றில் நிரந்தரப் பிறப்பெடுக்கவைக்கும் புகழ்வாயில். எனவே மக்களையோ புலிகளையோ என்றுமே அச்சுறுத்தவோ அடிமைப் படுத்தவோ முடியாது. இதுவே புலம்பெயர்ந்த தமிழர்க்கு நான் கூறும் உறுதிமொழி.

அன்பின்
தமிழீழ மகன்
11. 06. 1992.

## ஒரு பௌர்ணமிக்...

ஆதாரம்- 1. 'Two Damilas sena And Guttaka ons of a Freighter who Brought Horses Hither, conquered The King Suratissa, at the Head of a Great Army and Reigned Both Twenty Years Justly' Mahawamsa, Chapter: XXI, Prose 10 & 11

2 பூநகரியில் கண்டுபிடிக்கப்பட்ட இரண்டு மட்பாண்ட சாதனங்களிலிருந்து " (ஈழ், ஈலா) ஈழவூர் பூநகரி என்பதும், அநுராதபுரத்தின் மீது படையெடுத்த தமிழ் மன்னர்கள் அனைவரும் தமிழ் நாட்டிலிருந்து படையெடுக்கவில்லை, இலங்கையின் இன்னொரு பாகத்திலிருந்தே படையெடுத்திருக்க வேண்டும் என்பதும் அநுராதபுர அரசை முதன்முதல் கைப்பற்றி 22 வருடங்கள் ஆட்சி புரிந்த சேன, குத்திக என்ற தமிழ் மன்னர்கள் பூநககரிப் பகுதியிலிருந்தே அநுராதபுர அரசின் மீது படையெடுத்திருக்கலாம் எனக் கருத இடமுண்டு.
- ப. புஸ்பரட்ணம், வரலாற்று விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்.

3. தென்னிலங்கையைச் சிங்கள ஆரியர்கள் கைப்பற்றிக் கொண்டார்கள். விஜயனின் பின்னர் 206 ஆண்டுகள் (கி. மு. 483-கி. மு 177)
தாம்ரபரணிப் பிரதேசத்தில் சிங்கள ஆட்சி நடந்தது. இந்த ஆட்சிக்கு கி. மு 177 இல் முடிவு வந்தது. அவ்வேளை சிங்கள இராட்சிய மன்னனாக விளங்கிய தேவநம்பிய தீசனின் சகோதரரான சூரதீசன் இரு தமிழ்த் தலைவர்களினால் தாக்கப்பட்டான். சேனன் குத்திகன் என்ற இந்த இரு தமிழ்த் தலைவர்களை மகாவம்சத்தை மொழிபெயர்த்த டேர்னர் கடற்படையிலும் குதிரைப்படையிலும் சிறந்த இரு தமிழர் எனக்கருதுவர். கைகர் என்பார், இவர்கள் இருவரையும் இங்கு குதிரைகள் கொண்டு வந்த ஒரு கடல்காரனின் மக்கள் என்பர். எவ்வாறாயினும் சிங்கள ஆரியரிடம் இழந்த தாமிரபரணி அரசினை சேனன், குத்திகன் என்ற தமிழர்கள் மீட்டு இருபத்திரண்டு ஆண்டுகள் அநுராதபுரத்திலிருந்து அரசாண்டனர்"
க. குணராசா, முத்தமிழ் விழா மலர்

■ முற்றும் ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# "உதயதாரகை"

## பாதிக்கப்பட்ட பெண்களுக்கான புனர்வாழ்வுப் பணிகளில்

ஒரு தேசம் போர்க்கால நெருக்கடிகளுக்கும் -இராணுவ வன்முறைகளுக்கும் உட்படும் போதெல்லாம் கூடிய பாதிப்புகளை எதிர் நோக்குவது பெண்களேயாவர் இவ்வகையில் தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றிலும் பெண்கள் நேரடி, மறைமுகப்பாதிப்புகளுக்கு உட்பட்டுள்ளார்கள், உட்பட்டு வருகின்றார்கள்.

மேலும் குடும்பத்தில் கணவனோ, தந்தையோ, சகோதரனோ கைது செய்யப்படும் போதும், காணாமல் போகும் போதும் -இராணுவத் தாக்குதல்களினால் உழைப்பில் ஈடுபட முடியாமல் போகும் சந்தர்ப்பங்களிலும் குடும்பத்தைக் கொண்டு நடாத்த வேண்டிய பொறுப்புப் பெண்களையே சாருகின்றது.

மறுபுறம் போர்க்கால நெருக்கடிகளினால் வேலை வாய்ப்புகள் பெருமளவிற்குக் குறைந்து விட்டன. இந்த நிலையில் பெண்கள் தமது குடும்பத்தைக் கொண்டு நடாத்தப் பெரும் சிரமப்பட்டு வருகின்றார்கள். பாதிக்கப்பட்ட பெண்களுக்கான புனர்வாழ்வுப் பணிகளை மேற்கொண்டு வரும் -விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பானது "உதயதாரகை" நிறுவனங்களில் பாதிக்கப்பட்ட பெண்களுக்குத் தொழில் வாய்ப்பு வழங்கி வருகின்றது.

இவ்வகையில் சிற்றுண்டிகள் உற்பத்தியில் 23 பெண்களும்.

கருவாடு பதனிடும் தொழிலில் 08 பெண்களும்.

தும்புத் தொழில் நிலையத்தில் 18 பெண்களும்.

தையல் நிலையத்தில் 20 பெண்களும்.

பப்பட உற்பத்தித் தொழிலில் 19 பெண்களும் வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர்.


உதயதாரகை சிற்றுண்டிகள் தயாரிக்கப்படும் நிலையத்திற்குக் கடந்த 1-4-92 இல் நாம் நேரடியாய்ச் சென்றிருந்ததோம். இங்கு கச்சான் அல்வா, எள்ளு அல்வா, கடலைப் பருப்பு என்பன தயாரிக்கப்படுகின்றன.

நாம் சென்ற வேளையில் நிறுவனம் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. மேலும் இந் நிறுவனத்தில் வேலை வாய்ப்புப் பெற்றுள்ள பெண்களின் குழந்தைகளின் கல்வி வசதிகளையும் -விடுதலைப் புலிகள் மகளிர் பிரிவின் பாதிக்கப்பட்ட பெண்கள் புனர்வாழ்வு நிறுவனப் பொறுப்பாளர் செல்வி மாலினி ஏற்படுத்திக் கொடுத்துள்ளதை இங்கு தொழில் வாய்ப்புப் பெற்றுள்ள பெண்கள் எடுத்துக் கூறினார்கள்.

இந்தத் தொழிலகத்தில் நாம் இன்னொரு விடயத்தையும் அவதானிக்க முடிந்தது. அதாவது இங்கு வேலை வாய்ப்புப் பெற்றுள்ள ஒவ்வொருவரும் இது தன்னுடைய நிறுவனம் என்ற உணர்வுடன் செயற்பட்டு வருகின்றனர். மேலும் விரைவாக வேலை செய்யும்படி கட்டளையிட இங்கு யாருமே இல்லை.

**- செல்வன் -**

இங்கு வேலை செய்யும் பெண்கள் அனைத்துப் பத்திரிகைகளையும் வாசிப்பதாயும் -தமக்குள் கலந்துரையாடுவதாயும் குறிப்பிட்டார்கள். மேலும் இவர்கள் அனைவரும் ஒரே குடும்பத்தினர் போல ஒன்றிணைந்து செயற்பட்டு வருகின்றார்கள். சுருக்கமாய்க் கூறினால் இது வெறுமனே ஒரு சிற்றுண்டி உற்பத்தி நிலையம் அல்ல. இதில் இணைந்துள்ளவர்கள் தனியே ஊதியத்திற்காகச் செயற்படுவர்களும் அல்ல.



வேலையில் இணைந்துள்ள ஒவ்வொருவருமே புதிய சமூக, அரசியல் பார்வையைப் பெறுகின்றார்கள். இந்நிறுவனம் எதிர்நோக்கும் நெருக்கடிகள், பிரச்சினைகள் பற்றிய கேள்வியொன்றிற்கு அனைவரும் ஒருமித்த குரலில் பின்வருமாறு பதிலளித்தார்கள். "சிங்கள அரசின் முழுமையான பொருளாதாரத்தடை அமுலில் இருந்த நாட்களில் எமது நிறுவனம் முழு அளவில் செயற்பட்டது. எமது உற்பத்திப் பொருள்களுக்குப் பெரியளவில் தேவை இருந்தது. ஆனால் சிங்கள அரசினால் கட்டுப்பாடற்ற முறையில் இனிப்புப் பொருள்கள் அனுப்பப் படும் இன்றைய சூழலில் எமது உற்பத்திகளை முன்னர் போல சந்தைப்படுத்த முடியவில்லை."

உடனேயே எனது மனதில் இரண்டு மாதங்களுக்கு முன்னர் "உள்ளூர் உற்பத்தியில் தங்கியிருப்போம்" என்ற தலைப்பில் எமது பத்திரிகையில் பிரசுரமாகியிருந்த திரு. கோ. மகேந்திரராசா அவர்களின் பின்வரும் வசனங்களே நினைவிற்கு வந்தன.

"உண்மையில் இன்று எமது தேசத்தினுள் தாராளமாகச் சிறிலங்கா அரசினால் அனுப்பப் படும் அத்தியாவசியமற்ற பொருள்கள், முழுமையான பொருளாதாரத்தடையை விட மிகக் கூடிய தீமையையே விளைவிக்கின்றன".

ஆம், சிங்கள அரசின் சந்தையாக எமது தேசம் மாறிவிடாது தடுப்பதும் கூடத் தேசிய விடுதலைப் போராட்டத்தின் ஒரு முக்கிய பணியேயாகும். நம் ஒவ்வொருவருடைய மன நிலையும் மாறவேண்டும். முடிந்தவரை சுயஉற்பத்தியில் தங்கியிருக்க உறுதி பூண வேண்டும்.

# ஒரு பௌர்ணமிக்காலம்

**முன்கதைச் சுருக்கம்**

ஈழசேனன் ஈழவூரின் (பூநகரி) தலைவன் ஈழசேனன், தனது மூதாதையரான தாரதத்தன் காலத்தில் அநுராதபுரம் வரை தமிழர் ஆட்சி பரந்து இருந்தமையையும் நாடுகடத்தப்பட்டு வந்த விஜயனுக்கு தனது மூதாதையாளாகிய குவேனி உள்ளத்திலும் நாட்டிலும் உரிமை கொடுத்தமையால் அநுராதபுரம் சிங்கள நாடாகி சுரதீசனின் ஆட்சியில் இருப்பதையும் எண்ணிப் பார்க்கிறான். ஈழசேனன் நாகதீபத்தின் (யாழ். குடாநாடு) தலைவனாகிய நாககுத்தனுடன் அநுராதபுரத்திற்கு இந்திய குதிரை வியாபாரிபோல் செல்கின்றான். சுரதீசன் தமிழர்களைக் கொல்லவென ஆயிரம் குதிரைகள் கேட்கின்றான். அதற்குடன்பட்ட இருவரும் அக்குதிரைகளை ஓட்டிவர ஆயிரம்பேரை அனுமதிக்க வேண்டுமென வேண்டுகின்றனர். சுரதீசன் அனுமதி கொடுக்கிறான். இருவரும் ஈழவூர் திரும்புகின்றனர். "நண்பா இந்தக் கறுப்பி பொன்னம்மை என் தங்கை. மற்றவள் அன்னம்மை.." என தன் மாளிகையில் காணப்பட்ட இரு பெண்களை ஈழசேனன் நாககுத்தனுக்கு அறிமுகம் செய்கின்றான். அன்னம்மையின் மேல் மனதுள் காதல் கொள்கிறான் நாககுத்தன். மீண்டும் ஆயிரம் குதிரைகளுடனும் குதிரையோட்டிகளுடனும் அநுராதபுரத்துள் நுழையும் நாககுத்தனையும் ஈழசேனனையும் எந்தவித சந்தேகமும் கொள்ளாது நாட்டுக்குள் செல்ல அனுமதிக்கின்றனர் சிங்கள காவலர்கள். நகருக்குள் நுழையும் வழியில் "நண்பா உன்னிடம் நான் ஒன்று கேட்கலாமா?" என்ற நாககுத்தனை ஈழசேனன் வியப்புடன் பார்த்தான்.

**சென்ற இதழ் தொடர்ச்சி**

நாககுத்தன் தான் சொல்ல வந்ததைச் சொல்லச் சங்கடப்பட்டான். அந்த வீரனின் நெற்றியில் வியர்வை துளிர்ப்பதை ஈழசேனன் கண்டான். அவனுக்குச் சிரிப்பு உதடுகளில் கோடிட்டது.

"என்ன தயக்கம், கேள், நண்பா... கைப்பற்றிய பிறகு இந்த அனுராதபுரத்தில் நீ மன்னனாக முடிசூடிக் கொள்ள வேண்டுமா? உனக்கில்லாத தகுதியா எனக்கு இருக்கிறது...? தயங்காமல் கேள்...."

நாககுத்தனின் வலது கரம் நண்பனின் தோளில் படிந்து, அழுத்தியது.

"அப்படியொரு ஆசை எனக்கில்லை. உத்தரதேசமே எனக்குப் போதுமானது."

"அப்ப வேறென்ன?"

"இந்தத்தக்கணதேசத்தின் சிம்மாசனத்தில் உன்னை ஏற்றி உனக்கு முடிசூடும் போது உன்னிடம் அந்தக்கோரிக்கையைக் கேட்பேன். நீ மறக்காமல் வழங்க வேண்டும்...."

"என் இனிய நண்பனே! என் அன்னை மீதும் இந்த மண் மீதும் சத்தியம் செய்து சொல்கின்றேன். என் உயிரை வேண்டுமானாலும் நீ கேட்டால் உன் உதவிக்கு விலையாகத் தருவேன்..."

தூரத்தில் ஆலயமணி ஒன்று ஒலித்தது.

"வீரர்களே, புரவிகளில் தாவி ஏறுங்கள், அரண்மனையைத் தாக்கிக் கைப்பற்றுங்கள். ஆயுதம் கொண்டு எதிர்ப்பவர்கள் எவராயினும் அவர் தலை துண்டிக்கப்படட்டும். மக்கள் எவரையும் வருத்த வேண்டாம்... சூரதீசன் தப்பி ஓடிவிடக்கூடாது...."

திடீரென அனுராதபுரத்திற்குள் நூற்றுக்கணக்கான குதிரைவீரர்கள் சுழற்றிய வாளுடனும் ஏந்திய வேலுடனும் தோன்றியதை எவராலும் நம்ப முடியவில்லை. சாதாரண உடையில் இருந்தபலர் அவற்றைக் களைந்து யுத்த சன்னத்தராக மாறியதை எவராலும் நம்ப முடியவில்லை.

எதிர்த்த சிங்களவீரர்கள் உடல்கள் உயிரற்றுச் சரிந்தன. மூன்று நாழிகையுத்தத்தில் அரண்மனை ஈழசேனனின் கட்டுப்பாட்டிற்குள் வந்தது. சூரதீசன் தப்பி ஓடிவிட்டதாகச் செய்தி வந்தது. தமிழ் வீரர்கள் வெற்றிக்கோசம் எழுப்பினர். அவர்களுடன் அநுராதபுரத்து மக்களும் சேர்ந்து கொண்டனர். அவர்களும் ஆட்சிமாற்றத்தை விரும்பியவர்களாகக் காணப்பட்டனர்.

மீண்டும் இலங்காபுரியின் ஏக மன்னனாக தமிழ் மன்னன் ஒருவன் அரியணை ஏறினான். ஈழசேனன் தக்கணதேசத்தின் அரசனாக முடிசூடிக் கொண்டான்.

"என் ஆட்சியில் மொழி வேறுபாடு இல்லை அவரவர் தாம் விரும்பிய மொழியில் பேசிக் கொள்ளலாம். என் ஆட்சியில் மத வேறுபாடில்லை. நான் சைவன் ஆயினும் எந்த மதத்துக்கும் எதிரானவனல்லன். அவரவர் தம் மத அனுஸ்டானங்களைப் பின்பற்றலாம் எனது ஆட்சியில் பசிபட்டினி என்று எவரும் வாடக்கூடாது. சேர்ந்துழைப்போம்.... சேர்ந்தே உண்போம்...."

பௌத்த பிக்குகள் ஆசி கூறினர். பிராமண குருமார் வாழ்த்தினர்.

அரண்மனையின் மேன்மாடத்தில் ஈழசேனனும் நாககுத்தனும் தனித்திருந்தனர். வானத்தில் நிலவு முழுமையாகத் தொங்கியது. தூரத்தில் பௌத்த விகாரை ஒன்றின் தூபகம் நிழலுருவாகத் தெரிந்தது. அத்துடன் உடுக்கின் ஒலியும் பாட்டொலியும் காற்றில் கலந்து வந்தன.

"இப்பொழுதாவது கூறு, நண்பா" என்றான் ஈழசேனன்.

"பெரிதாக ஒன்றையும் நான் உன்னிடத்தில் கேட்கவில்லை. நாகதீபத்தின் மருமகளாகவும் உன் தங்கைகளில் ஒருத்தி வர வேண்டும், அதாவது என் மனைவியாக. அதுதான் என் விருப்பம், வேண்டுகோள்...."

"அது பெரும் பாக்கியம், நண்பனே. நானும் என் அன்னையும் கூட அதைத்தான் விரும்புகின்றோம். ஆனால் எனக்கு ஒரு தங்கைதான் உள்ளாள்..."

"அன்னம்மையா?.." என அடங்கா ஆவலுடன் நாககுத்தன் வினவினான்.

பௌர்ணமி நிலவை கருமுகில் மூடியது. ஈழசேனனின் முகத்தில் கவிந்து மூடிய துயரத்தின் சுவடுகள் நாககுத்தனுக்குத் தெரியவில்லை.

ஈழசேனன் மேன்மாடத்தின் சுவரருகில் சென்று அந்தகார வெளியில் விழிகளை மேயவிட்டான். தன்னை நோக்கி நாககுத்தன் நடந்து வருவது தெரிந்தது.

"ஆமாம், அன்னம்மையும் என் தங்கைதான் அவள் உனக்கே உரியவள்.... என்று கூறியவாறு தன் நண்பனை ஈழசேனன் அணைத்துக் கொண்டான். அவன் விழிகளில் கோடிட்ட நீருக்கு அர்த்தம் நாககுத்தனுக்குத் தெரிய நியாமில்லை.

"பௌர்ணமி நிலவை மூடிய கருமுகில் கலையத் தொடங்கியது.

தொடர்ச்சி 4ம் பக்கம் ....

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நிகழ்வும் நினைவும்

-திலீபன்

# 'திரிசங்கு' நிலையில் தமிழ்க் குழுக்கள்

கடந்த 28. 6. 92 அன்று வெளியாகியிருந்த வீர கேசரி' ஞாயிறு இதழில் 'ஈரோஸ்' சங்கர் அளித்திருந்த பேட்டி ஒன்றில் குறிப்பிடப்பட்ட விடயம் ஒன்றுடன் இன்றைய 'நிகழ்வும் நினைவும்' பகுதியினை ஆரம்பிக்கின்றேன். உண்மையான ஈரோஸ் அமைப்பு போராட்டத்தின் தேவையினை உணர்ந்து போராட்டத்துடன் தம்மை ஐக்கியப் படுத்திய பின்னரும் கொழும்பிலிருந்து இயங்கும் சங்கரும் ஒரு சிலரும் தம்மை 'ஈரோஸ்' என அழைத்துச் செயற்பட்டு வருவது வாசகர்கள் அறிந்ததே.

வீர கேசரிக்கு சங்கர் அளித்த பேட்டியில், "பிரதேச இராஜ்ய சபை என்ற பெயரில் முன் வைக்கப்பட்ட வடக்கு-கிழக்கு இணைப்பில்லாத யோசனை எமக்குப் பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளது" எனவும் "அரசாங்கத்தை சமரச பேச்சுவார்த்தை மேசைக்குத் தள்ளக் கூடிய இராணுவ பலம் புலிகள் இடத்திலுண்டு. தொடர்ந்து போராடக் கூடிய படைப் பலம், ஆயுத பலம் இவை இரண்டும் புலிகளிடம் உண்டு" எனவும் பேட்டியின் இரு வேறு இடங்களில் குறிப்பிட்டிருந்தார்.

சங்கர் குறிப்பிட்டுத் தான் இவ்விடயங்களை புரிந்து கொள்ள வேண்டிய நிலையில் தமிழ் மக்கள் இல்லை. இருந்தும் இன்று அரசுடன் இணைந்து இயங்கும் தமிழ்க் குழுக்கள் விடுதலைப்புலிகளின் போராட்டத்தால் எவ்வாறு 'குளிர்' காய்ந்து கொள்கிறார்கள் என்பதனை வெளிப்படுத்தவே நான் சங்கரை துணைக்கழைத்துக் கொள்கின்றேன்.

விடுதலைப்புலிகளுக்கு எதிரானது என்ற பெயரில் தமிழீழ மக்களுக்கெதிராக சிறிலங்கா அரசு நடாத்தி வரும் இனப்படுகொலைக்குத் துணை நிற்கும் தமிழ்க் குழுக்களை; விடுதலைப்புலிகளிடம் இருக்கும் ஆயுதங்களை சிறிலங்கா அரசு களைய வேண்டும் எனக் குரல் எழுப்பும் தமிழ்க் குழுக்கள்; பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் மூலம் தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திற்கு 'தீர்வு காண முயன்ற தமிழ்க் குழுக்கள் இன்று குழம்பிய நிலையில் திகைத்துப் போயிருக்கின்றன.

பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் மூலம் வடக்கு-கிழக்கு இணைந்த ஒரு தீர்வினைப் பெற்று விடலாம் என்ற நப்பாசையுடன் தமிழ்க் குழுக்கள் இணைந்து வடக்கு-கிழக்கு இணைந்த தீர்வினை வலியுறுத்தி மகஜர் ஒன்றினை தெரிவுக் குழுவிடம் கையளித்திருந்தனர்.

ஆனால் சிறிலங்காவின் இரு பெரும் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் வடக்கு-கிழக்கு இணைப்புக்கு தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தும் வகையில் தமது நிலைப்பாடுகளை பாராளுமன்றத் தெரிவுக் குழுவிடம் தெரிவித்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

"ஈழத்தினைத் தவிர எல்லாம் தருவேன்" என முழங்கிய ஜனாதிபதி பிரேமதாசாவும் வடக்கு-கிழக்கு இணைப்புக்கு எதிரான ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பிரகடத்தினை தற்போது துணைக்கு அழைத்துக் கொள்வதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

வட்டமேசை மகாநாடு, சர்வகட்சி மகாநாடு, பாராளுமன்றத் தெரிவுக்குழு போன்றவை தம் தலை மீது சுமத்தப்படும் நெருக்கடியினை வேறு திசைக்குத் திருப்புவதற்காக நாட்டின் ஆட்சிப் பீடத்தலைவராக இருந்த ஜே. ஆர். ஜெயவர்த்தனாவினாலும் பின்பற்றப்படும் தந்திரோபாயங்கள் என்பதனை இத் தமிழ்க் குழுக்கள் ஏன் தான் புரிந்து கொள்ளவில்லை என்பதும் எழுப்பப்பட வேண்டிய வினாவேதான்.

தற்போது, பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் இறுதி முடிவு வெளியாகி விட்டாலும் கூட வடக்கு-கிழக்கு இணையாத ஒரு அரைகுறைத் திட்டமே பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் குழந்தையாக குறை உயிருடன் பிரசவிக்கப்படும் என்பதனை எல்லோராலும் புரிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது.

இப்படியான அரைகுறைத் திட்டத்தினை ஏற்றுக் கொள்வதா நிராகரிப்பதா என்பதே இன்று தமிழ்க் குழுக்கள் முன் உள்ள பிரச்சினையாகும்.

இவ் அரைகுறைத் திட்டத்தினை எவர் ஏற்றுக் கொண்டாலும் விடுதலைப்புலிகளின் தலைமையில் தமிழீழ மக்கள் நடாத்தும் உறுதியான போராட்டத்தின் முன் இவ் அரைகுறைத் திட்டம் நிச்சயமாகப் பிசுபிசுத்துப் போய் விடும். ஆனால், கொழும்பில் தங்கியுள்ள தமிழ்க் குழுக்களைப் பொறுத்த வரையில் இவ் அரைகுறைத் திட்டத்தினை ஏற்றுக் கொண்டாலும் சரி, நிராகரித்தாலும் சரி பலத்த நெருக்கடிகளை எதிர் கொள்ள வேண்டிவரும்.

இத் திட்டத்தினை ஏற்றுக் கொண்டால் அது அவர்களது 'அரசியல் வாழ்வு' க்கு முடிவினைக் கொண்டு வந்து விடும். நிராகரித்தால் சிறிலங்கா அரசின் அழுத்தங்களுக்கு முகம் கொடுக்க வேண்டிவரும்.

இந்நிலையில், தற்போது பேசப்படும் பிரதேச இராஜ்ய சபை என்ற பெயரில் முன்வைக்கப்பட்டுள்ள திட்டம் தொடர்பாக தமது ஏமாற்றத்தை தமிழ்க் குழுக்கள் வெளிப்படுத்தியுள்ளன. தமது 'இரண்டும் கெட்டான் நிலை' ஏற்படுத்தப் போகும் பாதிப்புக்கள் தொடர்பாக இக் குழுக்கள் 'கவலை ' அடைந்துள்ளதாகவும் அறிய முடிகிறது. இத்தகைய ஒரு சூழ்நிலையில் தான் சங்கர், நான் ஆரம்பத்தில் குறிப்பிட்ட விடயத்தினைத் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத் தெரிவுக் குழு முன் வைக்கும் தீர்வு திருப்தி அளிக்காவிட்டாலும், விடுதலைப்புலிகள் நடாத்தும் ஆயுதப் போராட்டம் சிறிலங்கா அரசினை மீண்டும் பேச்சுவார்த்தை மேடைக்கு அழைத்து வரும். அப்போது மீண்டும் தமது 'அரசியல் வாழ்வினை' தொடர்ந்து நடத்தலாம் என்ற நோக்கு இவரின் இப் பேட்டியில் வெளியாகியிருந்தது. உண்மையில், விடுதலைப்புலிகள் நடாத்தும் அயுதப் போராட்டம் தான் சிறிலங்கா அரசுக்கு தான் நினைக்கும் அரைகுறைத் தீர்வினை தமிழ்த் தேசிய இனத்தின் மீது திணிக்க முடியாத நிலையினை உருவாக்கியுள்ளது.

தமது அரசியல் சாணக்கியம் குறித்து பெருமைப் பட்டுக் கொள்ளும் அமைச்சர் தொண்டமான் அவர்களின் அரசியல் பேரங்கள் கூட, வடக்கு-கிழக்கில் நடைபெறும் போராட்டத்தின் உக்கிரத்தினால் சாத்தியமாகின்றது என்பதனை புரிந்து கொள்வதும் சிரமமானதல்ல.

இன்று விடுதலைப்புலிகள் தான் தமிழ் மக்களின் பிரதான எதிரிகள் என்ற தோரணையில் தமிழீழ மக்களின் உரிமைப் போராட்டத்தினை நசுக்குவதற்குத் துடியாய்த் துடிக்கும் சிறிலங்கா அரசுடன் இணைந்து இயங்கி தமிழீழ மக்களுக்குத் துரோகம் புரியும் தமிழ்க் குழுக்களின் 'திரிசங்கு' நிலை ஒரு உண்மையினைத் தெளிவாக மீண்டும் உறுதி செய்கின்றது.

தமிழீழ மக்களின் வளமான வாழ்வும் எதிர்காலமும் விடுதலைப்புலிகள் நடாத்தும் உறுதியான போராட்டத்தின் வெற்றியிலேயே தங்கியுள்ளது என்பதே அவ் உண்மையாகும்.

## தனி அரசே...

அரசியல் உள்நோக்கத்துடனும் இலங்கைக்கு ஆயுத விற்பனையை மேற்கொள்ளலாயிற்று. கெடுபிடி யுத்தம் முடிவடைந்தமை, இவ்விடயத்தில் சீனாவுக்கும் வாய்ப்பாக அமைந்தது. மேலும் ராஜீவின் மரணத்தைத் தொடர்ந்து புலிகள் மீது இந்தியா சுமத்தும் குற்றச்சாட்டு அரசியல் இராணுவ ரீதியில் இலங்கைக்கு வாய்ப்பானதாய் அமைந்தது. இப்பின்னணிகளில் நின்று கொண்டு இராணுவ ரீதியான கண்ணோட்டத்தில் தமிழரின் பிரச்சினையை அணுகும் போக்கே தென்னிலங்கையில் முனைப்புப் பெறலாயிற்று. இது ஓர் இயல்பான தர்க்க பூர்வ நிலையாகும். அதேவேளை வெளிநாட்டு அழுத்தங்களுக்கும். உள்நாட்டில் தேர்தல் நோக்கு நிலையில் இருந்தும். பிரச்சினையை மென்மைப்படுத்த வேண்டிய ஒரு தேவை பிரேமாவுக்கு உண்டு. இத்தகைய இரண்டக நிலையில் வளர்ச்சி அடைந்து வரும் இராணுவக் கண்ணோட்டம் ஒரு புறமும். அரசியல் அழுத்தங்களுக்கும் அரசியல் தேவைகளுக்கும் முகங்கொடுக்கின்ற சமாதான தேவைகள் இன்னொரு புறமுமாக பிரேமா அரசு உள்ளது. இத்தகைய இருதலைக்கொள்ளி நிலை இலங்கை அரசாங்கத்தின் சகல செயல்களிலும் தொனிக்கிறது. முற்பட்ட ஒப்பந்த காலகட்டத்தில் எல்லாம் இத்தகைய இருதலைக் கொள்ளி நிலையில்லாது ஒருபுறம் சுய நெருக்கடியும் மறுபுறம் போலித் தீர்வுகளும் என்ற வெட்டொன்று துண்டு இரண்டான பாதை இப்போதைய அரசுக்கில்லை.

இத்தகைய பின்னணியில் பார்க்கும்போது தமிழர்களைத் தமது தேவைக்கு தீனியாகப் பாவிக்கும் நிலைக்குப் பதிலாக தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணும் நிலைக்கு வர வேண்டும். தமிழ் மக்களின் பிரச்சினையை அரசு தீர்க்க விரும்புமானால் அரசே தீர்வை முன் வைக்கவும் வேண்டும்.

### அதிகம் கேட்டார்கள்

இலங்கை- இந்திய ஒப்பந்தத்தின் கீழான தீர்வு தமிழருக்கு போதாது என்று கூறியே புலிகள் அவ்வொப்பந்தத்துடன் முரண்பட்டனர். இறுதியில் அவ் வொப்பந்ததின் கீழ் அதனை எதிர்த்து யுத்தத்தில் ஈடுபடலாயினர். புலிகள் இலங்கை-இந்திய அரசுகளின் ஒப்பந்தத்தை மீறியே அந்த யுத்தத்தில் ஈடுபட்டபோது . இலங்கை அரசு புலிகளுடன் பேசி பிரச்சினையைத் தீர்க்கத் தயாரானது. புலிகளுடன் இலங்கை அரசு பேசத் 'தயாரானமை' என்பது அவ்வொப்பந்தத்தை விடவும் தாம் மேலதிகமாகத் தரத் தயார் என்பதையே குறிக்கும். இந்நிலையில் 'பேச்சுவார்த்தை பற்றிப் பேசுவதென்பது' இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை விடவும் அதிகளவு உரிமைகளைக் கொண்டதென்ற வகையிலேயே அமையலாம். இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை புலிகள் நிராகரித்துள்ள நிலையில் அதனை விடக்கூடுதலான ஒரு தீர்வை முன்வைக்கவேண்டிய பொறுப்பு இலங்கை அரசுக்கேயுண்டு. புலிகள் தமது கூடிய பட்சத் தீர்வாகத் தமிழீழத்தைக் குறிப்பிடுகின்றனர். ஆயினும் இலங்கை அரசு சமாதான வழியில் பிரச்சினைக்குத் தீர்வு காண விரும்பினால் அது முன் வைக்கும் திட்டத்தை தாம் பரிசீலிக்கத் தயாரெனப் புலிகள் அறிவித்துள்ள நிலையில் இலங்கை அரசு உருப்படியான திட்டத்தை முன்வைக்க வேண்டிய பொறுப்பில் உள்ளது.

### இராணுவத்தால் வெல்ல இயலாது

இராணுவ ரீதியில் தமிழ் மக்களை அரசு தோற்கடிப்பதென்பது சாத்தியப்படாது. இதனைக் கடந்த 20 ஆண்டு காலப் போராட்டம் நிருபித்து நிற்கின்றது. தற்போது இராணுவம் இலங்கை அரசியலில் ஒரு சக்தியாக உருப்பெற்றுள்ள நிலையில் தமது பதவி உயர்வுகளுக்கான ஒரு தளமாக இராணுவத்தினர் தமிழ் மண்ணைக் கருதுகின்றனர். இதனால் இராணுவத்தினர் மத்தியில் இழுபறிகளும் போட்டிகளும் நிலவுகின்றன. இது முற்றிலும் ஒரு தவறான அணுகுமுறையும் கண்ணோட்டமுமாகும். இவற்றிற்கு அப்பால் ஆக்கபூர்வமான வழியில் சிந்திக்க வேண்டியது ஆட்சியாளரின் பொறுப்பாகும்.

தமிழ் மக்களின் பிரச்சினையைத் தமிழ் மக்களின் கண்ணோட்டத்திலிருந்து அணுகாதவரை அது ஆக்கபூர்வமான சிந்தனையாக அமைய முடியாது.


தமிழ்ப் பகுதிகளில்
இராணுவ நுழைவு முயற்சிகளை எதிர்த்து

மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

நீதியான சமாதானப் பாதையில் . .

நாற்பதாண்டுகளுக்கும் மேலாக அமைதியைத் தேடும் தமிழீழத் தேசிய இனம் அமைதியை நோக்கி அணிதிரள்கிறது இலண்டனில்

காலம்: 25. 07. 1992

சனிக்கிழமை, மதியம்: 1. 30 மணி

இடம்: Hyde Park

இல் ஆரம்பமாகி
Trafalgar Square இல்

முடிவடையும்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net








## லெப். மொட்டை கஜன்

மேலைத்தேய எழுச்சியானது ஆயுதப் போராட்டமாக உருவெடுத்த போது ஆங்காங்கே உள்ள இளைஞர்கள் தமது சக்திக்கேற்றவாறு பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இவ்வாறு புறப்பட்ட இளைஞர் குழு ஒன்றில் தான் கஜனும் அங்கம் வகித்தான். அக்குழுவில் பயஸ், முத்துச்சாமி, உமாராம் போன்ற பல இளைஞர்கள் அங்கம் வகித்தனர். இளைஞர்களைத் திரட்டி தமிழீழ விடுதலைப் போராட்டம் பற்றிய கருத்துக்களைப் பரப்பிக் கொண்டிருந்தது அக்குழு.

1983 ஆம் ஆண்டு யூலையில் நிகழ்ந்த இனக்கலவரங்களைத் தொடர்ந்து எமது போராட்டம் அடைந்த திடீர் வளர்ச்சியைக் கண்டு அச்சமடைந்த சிறிலங்கா அரசு தமிழ் பேசும் விவசாயிகளிடம் இருந்த துப்பாக்கிகளை மீள ஒப்படைக்கும்படி கட்டளையிட்டது.

இவ்வாறு மீளப்பெறப்பட்ட துப்பாக்கிகள் கச்சேரிகள் மூலமாக சிறிலங்கா காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டன. காட்டு விலங்குகளிடமிருந்து பயிர்களைப் பாதுகாப்பதற்குப் பயன்பட்ட இத்துப்பாக்கிகள் அதைவிட மோசமான சிங்களக் குடியேற்றவாசிகளுக்கு வழங்கப்பட்டன. விலங்குகளால் பயிரழிவு மட்டுமே ஏற்பட்டது. இவர்களால் ஏற்படவிருப்பது இன அழிவு என்பதைப் புரிந்து கொண்ட கஜனும் அவனது நண்பர்களும் இத்துப்பாக்கிகளை கைப்பற்றத் தீர்மானித்தனர்.

நாற்புறமும் ஆற்றினால் சூழப்பட்ட புளியந்தீவு எனப்படும் மட்டக்களப்பு நகரினுள் ஆற்றங்கரையோரமாகவுள்ள ஒல்லாந்தர் கோட்டையினுள் அமைந்துள்ளது, மட்டக்களப்புக் கச்சேரி. புளியந்தீவுக்குப் போகும் பாலத்திற்கு அருகே மட்டக்களப்பு காவல் நிலையம் அமைந்துள்ளது. மட்டக்களப்பு காவல் நிலையத்துக்கும் கச்சேரிக்கும் இடையிலுள்ள தூரம் குறுக்காகப் பார்த்தால் சுமார் 500 யார்கள்தான் இருக்கும். மட்டக்களப்பு நகரினுள் செல்பவர்கள் காவல் நிலையம் முன்பாகத்தான் செல்ல வேண்டும் என்ற நிலையில் கச்சேரி மிகப்பாதுகாப்பான இடம் என சிறிலங்கா அரசினால் கருதப்பட்டு வந்தது. எனினும் சில தினங்களில் இத்துப்பாக்கிகளை சிறிலங்கா காவல்துறை பொறுப்பேற்க வேண்டியிருந்தது.

இந்நிலையில் தோணிகள் மூலமாக ஆற்றின் வழியாக கச்சேரியை அடைந்தனர் கஜனும் அவனது நண்பர்களும். இத்திட்டத்தில் சிறு தவறு நிகழுமாயின் தாம் அனைவரும் உயிர் தப்ப முடியாது என்பது அவர்களுக்குத் தெரியும். ஆனாலும் பேராட்டத்தின் வளர்ச்சிக்காக அந்த நிலைமையை எதிர்கொள்ள அவர்கள் தயாரானார்கள். அத்திட்டமும் வெற்றிகரமாக நிறைவேறியது.

ஆற்றின் வழியாக சுமார் எட்டு மைல்கள் தூரம் துடுப்பினால் வலித்தபடியே இந்தத் துப்பாக்கிகளைக் கொண்டு சென்றனர். இதற்குள் பொழுது விடிந்து விட்டது. ஆற்றங்கரைகளில் அவற்றைப் புதைத்தனர். மீண்டும் இரவு நேரம் அவற்றைக் கிண்டியெடுக்கத் தீர்மானித்தனர். இளைஞர்கள் வந்து இறங்கியதையும் இரவு நடந்த சம்பவத்தையும் கேள்விப்பட்ட புளொட் குழுவினர் ஆற்றங்கரை வழியே மோப்பம் பிடித்துத் திரிந்தனர். அவர்கள் தொகையான ஆயுதங்களைக் களவாடினர். உயிரைப் பணயம் வைத்து எடுக்கப்பட்ட ஆயுதங்களை களவாடிய இக் குழுவினரை விடயம் தெரியாத மக்கள் சோறு கொடுத்து வாழ்த்தி அனுப்பினர்.

இரவு நேரம் வந்ததும், இவர்கள் தங்கள் ஆயுதங்களைத் தேடினர். தாம் புதைத்த ஆயுதங்களை எடுத்தவர்களையும் தேடினர். இச்சம்பவத்தில் சம்பந்தப்பட்ட புளொட் உறுப்பினர்கள் இந்தியாவுக்கு தப்பியோடினர். அங்கே சென்று, கச்சேரியிலிருந்து துப்பாக்கிகளைக் கைப்பற்றிய சம்பவத்திற்கு உரிமையும் கோரினர்.

இந்நிலையில் இந்த ஆயுதங்களைக் கொண்டு மட்டக்களப்பு-வாழைச்சேனை வீதியில் வாகனத்தில் சென்ற புளொட் உறுப்பினர்கள் சிலர் கைதாகினர். கைதாவதற்கு முன் அவற்றினால் சண்டை பிடிக்க முடியும் என்பதைக்கூட மறந்து போயினர். காவல் நிலையத்தில் அனைத்து உண்மைகளையும் சொல்ல மட்டும் அவர்கள் மறக்கவில்லை. அதனால் கஜனும் அவனது நண்பர்களும் சிறிலங்காப் படையினரால் தேடப்பட்டனர். இந்நிலையில் அவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் இணைந்து கொண்டனர்.

பொன்னம்மானின் பயிற்சியில் இவர்கள் புடம் போடப்பட்ட தங்கங்களாயினர். மீண்டும் களத்தில் கால் வைத்தனர். யாழ். பொலிஸ் நிலையத் தாக்குதல் உட்பட குடாநாட்டில் நிகழ்ந்த பல்வேறு தாக்குதல்களில் பங்கு பற்றினர். முதன் முதல் மேற்கொள்ளப்பட்ட இராணுவமுகாம் தாக்குதலான கொக்கிளாய்த் தாக்குதலிலும் பங்குபற்றினர். மீண்டும் மட்டக்களப்பு பிரதேசத்தை நோக்கிப் பயணமாகினர்.

யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்பு செல்லும் குழுவினர் வழி வழியே தாக்குதல்களை நடத்திச் செல்வது வழக்கம். அவ்வாறே மூதூரில் தங்கிருந்த காலத்தில் சிறிலங்கா இராணுவத்தினரின் கவசவாகனம் ஒன்றினை கண்ணிவெடி மூலம் தகர்த்தான் கஜன். இத்தாக்குதலின் மூலம் கிடைத்த ஆயுதங்களுள் முதன் முதலாக கிடைத்த -303 ரக L. M. G யும் அடங்கும்.

மட்டக்களப்புச் சென்றடைந்ததும் தங்களால் கைப்பற்றப்பட்ட துப்பாக்கிகளைக் களவாடிக் கொண்டு தப்பித்தவர்களைக் கண்டான். அவனுக்கு ஆத்திரம் பொத்துக் கொண்டுவந்தது. "பிரச்சினை இன்னும் தீரவில்லை. நாங்கள் ஒரு விரும்பாத சூழ்நிலையில் சந்திக்க வேண்டிவரும்" என்று சொன்னான். இயக்கக்கட்டுப்பாடு கருதி மேற்கொண்டு எந்த நடவடிக்கையிலும் அவன் ஈடுபடவில்லை.

ஏறாவூர் பொலிஸ் நிலையத் தாக்குதலின் போதும் ஒரு குழுவிற்கு தலைமை தாங்கிச் சென்றான். அத்தாக்குதல் மூலம் கிடைக்கப் பெற்ற ஆயுதங்களை அணைத்தபடியே ஆனந்தக் கூத்தாடினான். இந்த விடயத்தில் அவன் சிறுபிள்ளைதான். தனது மகிழ்ச்சியைத் தெரிவிக்க அவனுக்கு வேறுவழி தெரியவில்லை.

மட்டக்களப்பில் இயக்கத்தின் உணவுத் தேவையையும் பொருளாதாரத் தேவையையும் கருதி மேற்கொள்ளப்பட்ட விவசாயச் செய்கையில் கூடியளவு அக்கறை காட்டினான். இரவு பகல் 'வித்தியாசமில்லாமல் உழவு இயந்திரத்துடன் உழைத்துக் கொண்டிருந்தான். அனாலும் போர்க்களங்கள் என்றால் அங்கு செல்வதற்கு துடியாய்த்துடித்தான்.

இறுதியில் 27-06-86 அன்று புலிபாய்ந்த கல்லில் நிகழ்ந்த இராணுவ முற்றுகை இவனை எம்மிடமிருந்து பிரித்தது. எமது முகாமை முற்றுகையிடுவதென்றால் அது இலேசான காரியமல்ல என்பதை உணர்த்தி விட்டே மடிந்தான்.

**'புலிபாய்ந்த கல் - இந்தப்பெயர் உனக்குப் பிடித்திருக்கும்'**

என்று புலிகளைப் பார்த்துக் கிண்டல் செய்தனர் சிலர். அந்தப் பெயர் மட்டுமல்ல அந்த மண்ணும் எனக்குப் பிடித்திருக்கிறது; ஆதலால் நான் இந்த மண்ணைப் பிரியத் தயாரில்லை என்று வெற்றுத் தோட்டாக்களுக்கு மத்தியில் கிடந்த அவனது புகழுடல் பறை சாற்றியது.

## எமது இதய அஞ்சலி

"சுதந்திரன்", "வீரவேங்கை" பத்திரிகைகளின் ஆசிரியரும், தமிழீழ விடுதலைப் போராட்டத்தை தன் சொல்லாலும் செயலாலும் வாழ்நாள் பூராவும் ஊக்குவித்தவருமான திரு.கோவை மகேசன் சென்னையில் 04-07-92 சனிக்கிழமை இயற்கை எய்தினார்.

"ஈழநாதம்" பத்திரிகையின் நிர்வாகி மேஜர் அழகன் வெற்றிலைக்கேணி போர்முனையில் வீர மரணமடைந்தார்.

இருவருக்கும் "களத்தில்" சார்பாக எமது இதய அஞ்சலிகளை தெரிவிக்கின்றோம்.

## பாடகர் கப்டன் வீரத்தேவன் பலாலி சமரில் வீரமரணம்

பலாலி இராணுவ முகாமில் இருந்து கட்டுவன் பகுதியூடாக முன்னேற முயன்ற இராணுவத்தினருடன் நடந்த நேரடி மோதலில் விடுதலைப்புலிகளின் பிரபல பாடகரும் யாழ். மாவட்ட தாக்குதல் படைப்பிரிவு இசைக்குழுவின் பொறுப்பாளருமான கப்டன் வீரத்தேவன் (பியூஸ்மாக் -துரைராசா சிவலிங்கம், அரியாலை) வீரமரணம் அடைந்தார்.

அண்மையில் வெளியான "களத்தில் நின்று வேங்கைகள்" பாடல் ஒலிப்பதிவு நாடாவில் இவரது "போருக்குப் போகும் புலிவீரா!", "தாயினும்மேலான காவலன் யாரடா?", அலைகடல் மீதினில் பயணம்", எங்களின் தேசம்" ஆகிய பாடல்கள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. முன்னேறமுயன்ற இராணுவத்தின் கவசவாகனத்தை தகர்த்தெறிந்து ஆயுதங்களைக் கைப்பற்றும் வேளை இவர் வீரச்சாவு அடைந்தார்.

அன்றைய தினம் மேஜர் சுதன், கப்டன் பவளன், கப்டன் செல்வன், லெப்டினன்ட் புகழேந்தி, லெப்டினன்ட் நித்தி, லெப்டினன்ட் நற்குணம், வீரவேங்கை இறையன்பன், முகிலன் ஆகியோர் வீரமரணம் அடைந்தனர்.

## விற்பனைக்கு

### "அரசு அமைப்பதற்கான தமிழர்களின் தாகம்" நூல்

விஸ்வநாதன் உருத்திரகுமாரன் எழுதிய, யூகோஸ்ஸிலேவிக்கியா, முன்னைய ரஸ்யா ஆகியவற்றில் இருந்து தோன்றிய புதிய அரசுகளின் அடிப்படையில், அரசு அமைப்பதற்கான தமிழர்களின் தாகம் என்ற ஆங்கில நூல் விற்பனைக்கு வந்துள்ளது. சர்வதேச தமிழர் ஒன்றியத்தின் வெளியீடாக வந்துள்ள இந்நூல் இன்றைய காலகட்டத்தில், வரலாற்றுப் போக்கில் தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தின் நியாயப்பாட்டை விளக்குகின்றது.

■ இதன் விலை $5.CC / 2.5C இதனை பின்வரும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

INTERNATIONAL FEDERATION OF TAMILS
17, BIRCHVIEW CLOSE, YATELEY,
CAMBERLY, SURREY GU17 7DL,
UNITED KINGDOM

## Y-8 விமானம்

ளின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

### தலைவர் நேரடி உரையாடல்

இவ்விமானம் மேலான தாக்குதலை வெற்றிகரமாக நடாத்திய தாக்குதல் குழுவினரையும், அப்பிராந்தியத் தளபதியையும், தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் நேரடியாகச் சந்தித்து உரையாடியுள்ளார். இச்சந்திப்பின் போது வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, ஆனையிறவு ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய யுத்த நடவடிக்கைகள் குறித்தும், தாக்குதல் வியூகங்கள், எடுக்கப்படவேண்டிய பலப்படுத்தல்கள் என்பனபற்றியும் தலைவர் பிரபாகரன் கலந்துரையாடியுள்ளதாகவும் செய்திகள் கூறுகின்றன.

### டாங்கிகள் சேதம்

இது ஒரு புறமிருக்க, விமானப் படை பாதுகாப்பளிக்க டாங்கிகள், கவச வாகனங்கள் சகிதம் வெற்றிலைக்கேணியிலிருந்து புறப்பட்ட இராணுவ அணியுடன் விடுதலைப்புலிகள் நேருக்கு நேராக மோதினர். இம் மோதலின் போது T65 ரக கவச வாகனங்கள் இரண்டை புலிகள் முற்றாகச் சேதப்படுத்தினர். எட்டு இராணுவத்தினர் தலத்திலேயே கொல்லப்பட்டனர். பல இராணுவத்தினர் படுகாயமடைந்தனர். இதனால் தரை நகர்வு முயற்சியைக் கைவிட்ட இராணுவத்தினர் காயப்பட்டவர்களை கெலிகொப்டர்களில் ஏற்றிக் கொண்டு பின் வாங்கிச் சென்றனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பிரித்தானியரின் பிரித்தாளும் தந்திரமும் தமிழ் மக்கள் பலியாகிய விதமும்

1

**1920** ஆம் ஆண்டு தொடக்கம் 1947 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதி தமிழ் மக்களின் தலைவிதியை நிர்ணயித்த ஓர் ஆக்க காலப்பகுதியாகும். இலங்கை, இந்தியாவின் ஒரு மாகாணமாக இணைந்து விடக்கூடிய வாய்ப்பிருந்ததை உணர்ந்த பிரித்தானியர்கள் அதனைத் தடுக்கும் முகமாகச் சிங்களவர்களைத் திருப்திப்படுத்தும் பொருட்டு தமிழர்களைப் பலியிட்டனர். இந்த வகையில் தமிழரைப் பலியிட்ட டொனமூர், சோல்பெரி அரசியல் அமைப்புத்திட்டங்கள் உருவாக்கப்பட்டன. பிரித்தானியர் இலங்கையைவிட்டு வெளியேறிய பின்பு சிங்களவர் இந்தியா மீதான தமது அச்சத்தை பூதாகாரப் படுத்தி அதன் பெயரால் தமிழர்களைப் பலியிட்டனர். இலங்கைக்கான இந்தியப் பின்னணியின் பெயரால் ஒடுக்கப்பட்டு வந்த தமிழ்மக்களை இந்திய அரசும் ஒடுக்குவதில் ஈடுபட்டது. பிரித்தானியரால் தமிழ் மக்கள் பலியிடப்பட்டமைக்குரிய காரணிகளை ஆராய்வதென்பது ஒரு பழங்கதையல்ல. உண்மையான காரணிகளைக்கண்டு கொண்டால் அது நிகழ்கால அரசியல் ஜீவநதிக்கு ஊட்டத்தை ஏற்படுத்தும். வரலாறு என்பது ஒரு பழங்கதையல்ல. அது நிகழ் கால, எதிர்கால வளர்ச்சி விதிகளுடன் சரிவர இணைக்கப்படும்பொழுது அது ஜீவநதிக்குரிய உயிரோட்டத்தை பெறும். தமிழ் மக்கள் அவர்களின் பெயரால் அல்லாமல் யார் யாரோவின் நலன்களுக்காக பலியிடப்பட்டு வந்துள்ளனர் என்ற உலக வரலாற்றுப் போக்கை இக்கட்டுரை கண்டறிய முயற்சிக்கின்றது.

ஆய்வு என்பது புலனுக்கு தெரிபவற்றை அப்படியே காட்டிவிடுவது மட்டுமல்ல; புலனுக்கு தெரியாது புதைந்து கிடக்கும் உண்மைகளைப் புலப்படுத்தும் முயற்சியும் ஆகும்.

இலங்கையின் இனப்பிரச்சனையில் முக்கிய தாக்கம் விளைவிக்கும் ஒரு காரணியாக இலங்கையுடன் தொடர்புற்றதான இந்தியப் பின்னணி அமைந்துள்ளது. இந்தியப் பின்னணி அடிப்படையில்தான் பிரித்தானியர் இலங்கைக்கான அரசியல் நடவடிக்கைகளைக் கைக்கொண்டனர். பிரித்தாளும் தந்திரத்தில் கைதேர்ந்தவர்கள் பிரித்தானியர்கள். சிறுபான்மை இனத்தை அணைத்துக் கொள்வதன் மூலம் சிறுபான்மை -பெரும்பான்மை இனங்களுக் கிடையில் பகைமையை உருவாக்கி சகல இனங்களையும் தனது ஆதிக்கத்தின் கீழ் வைத்திருப்பதற்கு ஏதுவான முறையே இந்தப் பிரித்தாளும் தந்திரமாகும்.

இந்தியாவில் இந்து, பௌத்தம், இஸ்லாம் என்ற அடிப்படையில் பிரிவினைக் கொள்கைகளை பிரித்தானியர் வளர்த்தனர். இந்தியாவின் சிறுபான்மையினரான பௌத்தர்களுக்கு "சார்பாக" நடந்து பின்பு பல உள்நோக்கங்களின் அடிப்படையில் பௌத்தர்கள் வாழ்ந்த பர்மியப் பகுதியை 1935 ம் ஆண்டு இந்தியாவிலிருந்து பிரித்து தனி அரச மைப்பின் கீழ் கொண்டு வந்தனர். அதே போல சிறுபான்மையினரான இஸ்லாமியருக்குச் "சார்பாக" நடந்து இறுதியில் 1947 ஆம்ஆண்டு இந்தியாவிலிருந்து பாகிஸ்தானைப் பிரித்தானியர் பிரித்து தனியரசாக்கினர்.

இவ்வாறு சிறுபான்மையினருக்கு"சார்பாக" நடந்துகொள்வதே பிரித்தாளும் கொள்கையின் மூல தந்திரமாகும். ஆனால் இலங்கையில் பிரித்தானியர் சிறுபான்மையினத்தவரான தமிழர்களுக்குப் பாதகமாக நடந்து பெரும்பான்மை இனமான சிங்கள - பௌத்தவர்களுடன் கை கோர்த்துள்ளனர். இந்த முரண்பாடு ஏன் நிகழ்ந்தது? எப்படி நிகழ்ந்தது?

நானூறுக்கும் மேற்பட்ட தனித் தனி இராச்சியங்களாக இருந்த இந்தியப் பிராந்தியத்தை ஓர் அரச அமைப்பின் கீழ் கொண்டு வந்த பிரித்தானியரால் இலங்கைத் தீவையும் இந்தியாவுடன் இணைப்பது ஓர் இயலாத காரியமாய் இருந்திருக்கும் என்றில்லை. முதலில் பிரித்தானியரால் கைப்பற்றப்பட்ட இலங்கையின் கரையோர மாகாணங்கள் ஆரம்பத்தில் மட்றாஸில் இருந்த பிரித்தானிய அரசாங்கத்தின் பரிபாலனத்திற்கு உட்பட்டதாய் இருந்தது. பின்பு முற்றும் முழுவதுமாக இலங்கை ஒரு தனி அரசியல் நிர்வாக இலக்கு, பொருளாதார நலன், மற்றும் பரிபாலன வசதி என்பனவற்றின் அடிப்படையில் பல்வேறு இராச்சியங்களாக இருந்து இந்தியாவை ஒரு பெரும் அலகாக ஆக்கி வைத்திருக்க வேண்டிய அவசியம் இருந்தது. ஆனால் இலங்கையை அந்த அலகுடன் இணைக்காது ஒரு சிறு தனிஅலகாக வைத்திருந்தமைக்கு பல உள்நோக்கங்கள் இருந்தன. இலங்கையின் அமைவிடமும் அதன் கேந்திர முக்கியத்துவமுமே அதனை ஒரு தனி அரசாக வைத்திருக்க வேண்டியதற்கான அடிப்படைக் காரணமாய் அமைந்தது. இந்தியாவுடன் இலங்கையை இணையவிடாது வைத்திருப்பதிலும், பார்த்துக் கொள்வதிலும் பிரித்தானியர் அக்கறையாய் இருக்கத் தொடங்கினர்.

இலங்கையை ஒரு தனி அலகாக வைத்திருப்பதில் தீர்க்கமான தீர்மானம் எடுத்துக் கொண்ட பிரித்தானியர்கள் அதனை பரிபாலிக்கும் முறை சம்பந்தமாக போதிய முன்னறிவற்ற தீர்மானங்களுக்கு முதலில் வந்தனர். அதாவது ஏனைய இடங்களில் நடந்து கொள்வது போலவே இலங்கையிலும் சிறுபான்மையினருக்குச் "சார்பாக" நடந்து இனங்களிடையே பகைமையை வளர்த்து முழு நாட்டையும் தமது ஆதிக்கத்தின் கீழ் வைத்திருக்கும் முறையைக் கைக்கொண்டனர். 1920வரை இலங்கையில் இது நிகழ்ந்தது.

பிரித்தானியர் தமிழ்த் தலைவர்களை அணைப்பதில் அக்கறையாய் இருந்தனர். பிரித்தானியரால் இலங்கையில் "சேர்" ("Sir") பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்ட முதல் இலங்கையர், தமிழரான சேர். முத்துக்குமார சுவாமி ஆவார். 1833 ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்த சட்ட நிரூபண சபையில் தமிழர் சார்பில் ஒரு பிரதிநிதியும், சிங்களவர் சார்பில் ஒரு பிரதிநிதியும் இடம்பெற்றனர். இதில் சிங்களவரும் தமிழரும் சம பிரதிநிதித்துவமாக இருந்தனர்.

சிங்களவர் மத்தியில் கரையோரச் சிங்களவர், கண்டிச் சிங்களவர் என்ற இரு வேறுபாடுகளை அவதானித்து அதனை வளர்த்து விடுவது தமக்குச் சாதகமானது என்பதை விளங்கிக் கொண்ட பிரித்தானியர் பிரித்தாளும் கொள்கையின்அடிப்படையில் சிங்கள இனத்தையே மேலும் இரண்டாகப் பிரிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். அதன் பிரகாரம் 1889 ஆம் ஆண்டு கண்டிச் சிங்களவர்களுக்கு என ஒரு பிரதிநிதித்துவம் சட்ட நிருபண சபையில் ஒதுக்கப்பட்டது. எனவே தற்போது மூன்று வேறுபட்ட சமூகங்களாகக் கருதப்பட்டு ஒரு தமிழ்ப் பிரதிநிதித்துவம், ஒரு கரையோரப் பிரதிநிதித்துவம், ஒரு கண்டிச் சிங்கள பிரதிநிதித்துவம் என உருவாக்கினர். இவற்றை தமிழ் பிரதிநிதிகள், சிங்களப் பிரதிநிதிகள் என எடுத்துக்கொண்டால் ஒரு தமிழ் பிரதிநிதிக்கு இரு சிங்களப்பிரதிநிதி என வரும். ஆனால் 1912ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட அரசியல் சீர்திருத்தத்தின்படி ஒரு தமிழ் பிரதிநிதித்துவம் ஒரு கரையோர சிங்களப்பிரதிநிதித்துவம் என ஆதிக்க தமிழ் சிங்கள பிரதிநிதித்துவம் இரண்டு தமிழுக்கு மூன்று சிங்களத்திற்கு என விகிதாசாரம் மாறியது. இது தமிழ் தலைவர்களுக்கு திருப்தியளித்தது. அத்துடன் 1912ஆம் ஆண்டு அரசியல் திருத்தப்படி கல்விகற்ற இலங்கையர்களுக்கான தெரிந்தெடுக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டது. இதில் மாக்கஸ் பெர்னாண்டோ எனப்படும் கரையோர சிங்களநபரை எதிர்த்துப் போட்டியிட்ட தமிழராகிய சேர். பொன். இராமநாதன் வெற்றி பெற்றார். இதன் மூலம் பிரதிநிதித்துவம் மூன்றுக்கு மூன்று என வந்தது. கரையோரச் சிங்களவர் கண்டிச் சிங்களவர் என்ற வேறுபாடும் வேறு சில காரணிகளும் சேர்ந்து இராமநாதனை வெல்ல வைத்தன. இத்தேர்தலுக்கு அடிப்படையான கல்வித்தகைமையிலான வாக்குரிமை முறையும், இந்த வெற்றியும் தமிழ்த்தலைமையைத் திருப்திப்படுத்தியது.

அப்போது (1912) ஆறு இலட்சம் (600, 000) தமிழ் மக்களின் சனத்தொகையில் 1346 தமிழர்கள் கல்வித் தகைமையின் அடிப்படையில் வாக்குரிமை பெற்றிருந்தனர். இருபத்தெட்டு இலட்சம் (28. 00, 000) சிங்கள மக்களின் சனத்தொகையில் 1748 சிங்களவர்களே கல்வித் தகைமையின் அடிப்படையில் வாக்குரிமை பெற்றிருந்தனர்.

இவ்வாறாக தமிழ்த்தலைவர்கள் திருப்தி அடைந்து வந்த அரசியற் போக்கானது 1921ஆம் ஆண்டு மன்னிங் அரசியற் திட்டத்திருத்தத்தின் மூலம் மாற்றி அமைக்கப்பட்டது. இதில் மூன்று தமிழர்களுக்கு பதின்மூன்று சிங்களவர் என்ற அளவில் சட்டநிருபண சபை அமைந்தது. சேர். பொன் அருனாசலம் தலைமையிலான தமிழர்கள் இந்த அரசியல் சீர்திருத்தத்தை எதிர்த்தனர்.

தமிழ்த்தலைவர்கள் இதனைக்கண்டு பெரிதும் அதிருப்தி அடைந்தனர். தமிழ்த் தலைவர்கள் இவ்வாறு அதிருப்தி அடைவதற்கு இதுவரை காலமும் கடைப்பிடித்து வந்த கொள்கைக்கு மாறாக பிரித்தானியர்கள் தமது கொள்கையில் மாற்றம் செய்திருந்தனர்? இந்த அரசியல் அமைப்புத்திட்டத்தின் கர்த்தா ஆள்பதி மன்னிங். அக்காலகட்ட யதார்த்தத்தினை அவதானித்த மன்னிங் சில உள் நோக்கங்களின் அடிப்படையில் புதியதிட்டத்தை வரைந்தார். 1920 வரை தமிழர் பற்றி பிரித்தானியர் கொண்டிருந்த கருத்தினை

**அரசியல் ஜீவநதிக்கு ஊட்டத்தை ஏற்படுத்தும். வரலாறு என்பது ஒரு பழங்கதையல்ல. அது நிகழ் கால, எதிர்கால வளர்ச்சி விதிகளுடன் சரிவர இணைக்கப்படும்பொழுது அது ஜீவநதிக்குரிய உயிரோட்டத்தை பெறும். தமிழ் மக்கள் அவர்களின் பெயரால் அல்லாமல் யார் யாரோவின் நலன்களுக்காக பலியிடப்பட்டு வந்துள்ளனர் என்ற உலக வரலாற்றுப் போக்கை இக்கட்டுரை கண்டறிய முயற்சிக்கின்றது.**

நோக்குதல் இங்கு பொருத்தமாகும்.

" இலங்கை மக்களில் ஒரு பகுதியினராகிய தமிழர்கள் காலனித்துவ ஆதிக்கத்தின் நல்வாழ்வுக்கும் பொருளாதார நலனுக்கும் மிகவும் அத்தியாவசியமானவர்கள்".

என்று இலங்கையின் ஆள்பதியாக இருந்த சேர். கென்றி மக்கலம் 1909 ஆம் ஆண்டு மே மாதம் 26 திகதி பிரித்தானியாவின் குடியேற்ற நாடுகளுக்கான மந்திரியாய் (The secratary of state for Colonies) இருந்தக் குறூ பிரபுவுக்கு (Lord Crewe) எழுதிய அறிக்கையில் மேற்படி குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறாக தமது நலனின் பொருட்டு தமிழரைப் பலவாறாகப் புகழ்ந்து வந்த பிரித்தானியர்கள் ஏன் பின்பு தமிழர் அதிருப்தி அடையக் கூடிய வகையில் அரசியல் திட்டத்தை வகுத்தனர்? இதற்கான காரணங்கள் ஓரளவு துலக்கப்படக்கூடியவையே.

இந்திய தேசிய காங்கிரஸ் பூரண சுய இராட்சியம் என்ற கொள்கையை முன்வைத்திராத அந்தக் காலகட்டத்தில் சேர் . பொன் அருணுசலம், இந்திய தேசியக் காங்கிரசின் கோரிக்கையையும்விட தீவிரமான கோரிக்கையுடன் 1919ஆம் ஆண்டு இலங்கை தேசியக் காங்கிரசை ஆரம்பித்தார். 1917 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இலங்கை சீர்திருத்த கழகம் (Ceylon Reform League) வாயிலாக அருணாசலம் அரசியல் சீர்திருத்தம் கோரி மிகத் துடிப்புடன் பிரித்தானியர்களுக்குத் தலையிடி கொடுத்தார்.

1915 ஆம் ஆண்டு கலகத்தின் போது பெரும்பான்மையினரான பிரித்தானியர் சிங்களவர்களை பெரிதும் ஒடுக்கியபோது அருணுசலத்தின் சகோதரனாகிய சேர் . பொன். இராமநாதன், 1 ஆம் உலக யுத்த சூழலைக் கூட கருத்தில் கொள்ளாது இங்கிலாந்து சென்று அங்கு சிங்களவர்களுக்காக நியாயம் கேட்டமை சிங்களத் தலைவர்களுக்கு தமிழ் தலைவர்கள் மீது ஒரு மரியாதையை ஏற்படுத்தி இருந்தது.

இப்பின்னணியில் சேர். பொன். அருணுசலம் தேசிய காங்கிரசின் தலைவராக சிங்களத் தலைவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டமையை அவதானித்த பிரித்தானியர் தமிழ், சிங்கள மக்கள் இணைந்த ஒரு தேசிய போராட்டம் பிரித்தானியருக்கு எதிராக எழுந்து விடுமோ என்று ஐயப்பட்டனர். இந்திய தேசியக் காங்கிரசின் வாடையும் இலங்கையில் சற்று வீசியது. இந்நிலையில் இன வேறுபாடுகளைக் கடந்து முழு இலங்கையரும் ஐக்கியப்பட்டுப் போராடக் கூடியதான ஒரு கரு தோன்றுவதை அடையாளம் கண்ட பிரித்தானியர் தமிழரையும் சிங்களவரையும் கொழுவி விடுவதற்காக தமிழரை "அணைத்து வந்தமைக்குப்" பதிலாக சிங்களவரை "அணைக்கும்" கொள்கைக்கு மாறினர். இந்த இடத்தில் ஓர் எடுகோள் ஒன்றினையும் நாம் கருத்திற்கு எடுத்தல் பொருத்தமுடையதாகும்.

"பிரித்தானிய குடியேற்ற அரசு ஆரம்பத்தில் தமிழர்களுக்குச் சலுகைகளை வழங்கிக் கொண்டு வந்தது. ஆயினும் படிப்படியாக சிங்களவர் சார்பாக செயற்படத் தொடங்கியது. இதற்கான காரணம் முதலாம் உலக யுத்தத்திற்குப் பின் இந்திய துணைக் கண்டத்தில் தோன்றிய தேசிய உணர்வைப் பிரித்தானிய குடியேற்ற அரசு விரும்பாமையே".

தமிழ்-சிங்கள தலைவர்களிடையே பிரச்சனையை உருவாக்குவதில் மன்னிங் மிகவும் அக்கறையாக இருந்தார். ஒருபுறம் அருணாசலத்தின் கோரிக்கைக்கு ஆதரவளிக்கும் பாணியில் நடந்து அவரைத் தூண்டுவதில் ஈடுபட்டார். மறுபுறம் சிங்களத் தலைவர்களின் விருப்பத்துக்கு ஏற்ற வகையில் அரசியல் அமைப்புத் திட்டத்தை உருவாக்கினார். 1920ஆம் ஆண்டு அரசியல் அமைப்புத் திட்டம் சிங்களவர்களுக்குத் திருப்தி அளித்தது. தமிழர்கள் அதிருப்தி அடைந்தனர். சிங்கள தமிழ்த் தலைவர்களிடையேயான உறவு உடைந்தது. சேர். பொன். அருணாசலம் இலங்கைத் தேசிய காங்கிரசை விட்டு வெளியேறி தமிழர் மகா சபையை அமைத்தார். இலங்கைத் தேசிய காங்கிரசை அதன் கரு நிலையிலேயே, ஆரம்பத்திலேயே உடைப்பதில் மன்னிங் வெற்றி கண்டார். தேசிய காங்கிரசை உடைத்தமைக்குரிய "பெருமை" மன்னிங்கைச் சாரும்.

மேலும்;

இலங்கையை ஆண்ட பிரித்தானிய ஆள்பதிகளுள் மன்னிங் மிகவும் மதிநுட்பம் வாய்ந்த ஒருவர். இலங்கையில் பிரித்தானியர் ஆதிக்கத்திற்கு எதிராக எழுந்துள்ள மிகப் பெரும் சவாலாக இலங்கைத் தேசிய காங்கிரசைக் கருதினார். ஆதலினால் சற்றும் தயவு தாட்சண்யம் அற்றமுறையில் அதனை உடைத்தெறிய முற்பட்டார். என்று கே. எம். டி. சில்வா கூறியுள்ள கருத்தும் இங்கு கவனிக்கத்தக்கது.

இங்கு ஒரு விடயம் தெளிவாகிறது. சிறுபான்மையினராகிய தமிழர்களுக்குச் சார்பாக நடந்து பெரும்பான்மை இனத்தையும் சிறுபான்மை இனத்தையும் பகைமை நிலைக்குத் தள்ளி இருவரும் இணைந்த ஒரு தேசிய விடுதலைப் போராட்டம் உருவாக விடாது பிரித்தானியர் பார்த்துக்கொண்டு வந்தனர்.

**மிகுதி அடுத்த இதழில்,...**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சிறீலங்கா இராணுவ இயந்திரமும்

**சிறீலங்கா பேரினவாத அரசானது தமிழீழ மக்களின் தேசிய எழுச்சியை இராணுவ வழிமுறைகள் மூலம் நசுக்குவதற்காக திட்டமிட்டு படிப்படியாகச் செயற்பட்டு வருகின்றது.**

**அதற்காக பலமானதொரு இராணுவ இயந்திரத்தையும் கட்டியெழுப்பி அதற்கெனப் பெருமளவு நிதியையும் கொட்டிக்குவித்துச் செலவிடுகின்றது.**

**இக்கட்டுரையில் சிறீலங்கா இராணுவ இயந்திரம் தொடர்பான சில விபரங்களை மேலோட்டமாகத் தந்துள்ளோம்.**

**"ஆறுமாதங்களில் பயங்கரவாதிகளைப் பூண்டோடு ஒழித்துக்கட்ட வேண்டும்"** எமது விடுதலைப் போராட்ட வரலாற்றில் கேட்டுக் கேட்டுப் புளித்துப்போன வாக்கியம். இது இந்தப் புலம்பலின் பிதாமகன் முன்னாள் சிறிலங்கா ஜனாதிபதி திரு. ஜே ஆர் ஜெயவர்த்தனா ஆகும்.

1978ஆம் ஆண்டு புலிகள் இயக்கத்தை உத்தியோகபூர்வமாகத் தடைசெய்துவிட்டு, 1979ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் போராட்டக் குழந்தையைக் கொன்றுவிடும் முகமாக பிரிகேடியர் வீரதுங்கா என்னும் சிங்கள இராணுவத் தளபதியை யாழ்ப்பாணத்திற்கு நியமித்துவிட்டு, திரு ஜே ஆர் விடுத்த கர்ச்சனை தான் மேற்குறித்த வாக்கியம்.

அன்றிலிருந்து இன்றுவரை சிங்கள இனவாத சக்திகளினால் மேற்குறித்த வாக்கியம் சிறிய சிறிய மாற்றங்களுடன் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. பிரிகேடியர் வீரதுங்காவின் தலைமையின் கீழ் தான் முதன்முதலில் ஆயுதப்படையினருக்குத் தமிழ் மக்களைக் கொலை செய்யும் அதிகாரங்கள் வழங்கப்பட்டு, தமிழ் இளைஞர்களை வேட்டையாட சிறீலங்கா அரசு அனுமதி அளித்தது.

அதன் பிரகாரம் நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு இராணுவ முகாம்களிலும் பொலிஸ்நிலையங்களிலும் அடைக்கப்பட்டார்கள். சில இளைஞர்கள் அங்கேயே கொன்று புதைக்கப்பட்டார்கள். சிலரது சடலங்கள் தெருவீதிகளில் வீசப்பட்டன.

இராணுவ பலத்தைப் பயன்படுத்தி தமிழரின் தேசியப் பிரச்சனையைத் தீர்க்க முயன்ற வரலாறு இப்படித்தான் தொடங்கியது. தமிழீழ மக்களின் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக சிங்கள ஆட்சியாளர்கள் செய்ததெல்லாம் தமது இராணுவ பலத்தைப் படிப்படியாக அதிகரித்து, பிரமாண்டமான ஒரு இராணுவ இயந்திரத்தைக் கட்டியெழுப்பி, அதற்குத் தீனி போட்டுக் கொண்டிருப்பதுதான்.

இன்று சிறீலங்கா அரசிடம் பிரமாண்டமானதொரு இராணுவ இயந்திரம் உண்டு. போர்விமானங்கள், போர்க்கப்பல்கள், கவச வாகனங்கள், நீண்டதூரம் குண்டுகளைச் செலுத்தக்கூடிய ஆட்டிலறிகள், டாங்கிகள், இவைபோன்ற நவீன படைக்கல வசதிகளுடன் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான படைவீரர்களையும் கொண்டு சிறீலங்காவின் ஆயுதப்படைகள் விளங்குகின்றன.

இந்த இராணுவ இயந்திரத்தைப் பராமரிப்பதற்கென்று வருடாவருடம் பல்லாயிரம் கோடி ரூபாய்களைச் சிறீலங்கா அரசு செலவு செய்கின்றது. இவ்வளவு தொகையில் பணத்தைச் செலவுசெய்து பாரியதொரு இராணுவ இயந்திரத்தைக் கட்டியெழுப்ப சிறீலங்காவிற்கு அப்படி என்ன தேவை இருக்கின்றது? பலம் மிக்கதொரு எதிரிநாட்டைத் தனது எல்லையில் அது கொண்டிருக்கிறதா? அல்லது வெளிநாட்டிலிருந்து வரும் ஆக்கிரமிப்பொன்றிற்கு முகங்கொடுக்கத் தன்னை அது தயாராக்குகின்றதா?

இவை எதுவுமே இல்லை. தமிழீழ மக்களின் விடுதலைப் போரை ஒடுக்க - அவர்களை அடிமைப்படுத்த - தமிழர்களின் விடுதலைப்படையாகிய புலிகள் இயக்கத்தை அழிக்கவே இப்படியான பாரிய இராணுவ இயந்திரத்தைக் கட்டிவளர்த்து பெருமளவு பணத்தைக்கொட்டிச் செலவழிக்கின்றது.



# தமிழீழ விடுதலைப்போராட்டமும்

## ஆயுதப்படைகளின் விபரங்கள்

இன்றைய நிலையில் சிறீலங்கா அரசின் ஆயுதப்படைகளில் ஒரு இலட்சம்(100000) போர் வீரர்கள் அங்கம் வகிக்கின்றனர்

ஆயுதப்படைகள் என அழைக்கப்படுவது இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகிய முப்படைகளையும் சேர்த்தேயாகும்.

1991 ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி

* சிறீலங்கா அரசிடம் 80 000 பேர் கொண்ட இராணுவம் உண்டு
* 14000 பேர் கொண்ட கடற்படை உண்டு,
* 6000 பேர் கொண்ட விமானப் படை உண்டு.

ஆகவே மொத்தம் ஒரு இலட்சம் ஆயுதப்படைகள் சிறீலங்கா அரசிடம் உண்டு. பொலிஸ் படை ஆயுதப் படைகள் என்ற வகைக்குள் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை. (இந்தப் பொலிஸ் படைக்குள் தான் 5000 பேர் கொண்ட கொலைகாரப் படையாகிய எஸ். ரி. எவ் எனப்படும் விசேட பொலிஸ் கொமாண்டோக்களும் உள்ளடங்குகிறார்கள் என்பது குறிப்பிடத் தக்கது) இவற்றுடன் ஊர்காவற் படை மற்றும் ஆயுதம் தாங்கிய தொண்டர்படை என்பவற்றுடன் றிசேவ் (மேலதிக) படையினரும் ஆயுதப்படைகள் என்ற வரையறைக்குள் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை, இவற்றை பரா துருப்புக்கள் என்றே அழைப்பது உலகப் பொது விதியாகும். ஆனால் சிறீலங்காவைப் பொறுத்தவரையில் பொலிஸ், ஊர்காவற்படை, தொண்டர் படை, றிசேவ் படை ஆகிய ஆயுதம் தாங்கிய அனைத்துப் பிரிவினரும் தமிழர்களுக்கெதிராக ஆயுதப்படைகளைப் போன்றே பயன் படுத்தப்படுகின்றனர்.

1991 ஆம் ஆண்டுக்கணிப்பின்படி சிறீலங்காப் பொலிஸ் படையில் 28000 பேர் உள்ளனர். தேசிய துணைப்படை (National Auxiliary FOrce) என்ற பெயரில் 10000 பேர் உள்ளனர்.

ஊர்காவல் படையில் 18000 பேர் அங்கம் வகிக்கின்றனர், இந்த வகையில் 56000 பேர் பரா துருப்புக்கள் என்ற வகையில் அடங்கியிருக்கின்றனர், எனவே ஆயுதப்படைகள் என்ற வகைக்குள் ஒரு இலட்சம் (100000) பேர் இருக்கும். அதே சமயம் ஆயுதப்படைகள் என்ற வகைக்குள் அடங்காத அரசின் சட்டபூர்வ ஆயுதபாணிகளான 56.0000 பரா துருப்புக்கள் இருந்து ஆயுதப்படைகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். இதைவிட சிறிய சிறிய ஆயுதக் குழுக்களும் அரசிடம் உண்டு.

**இந்த அடக்குமுறை இராணுவ இயந்திரத்தை அடித்து நொருக்குவதில் நாம் நம்பிக்கைக்குரிய வெற்றிகளைப்பெற்று வருகின்றோம். பல கோடி ரூபா செலவு செய்து, சிறிலங்கா அரசு கொள்வனவு செய்யும் பல இராணுவத் தளபாடங்களை சிங்களப் படைகளிடமிருந்து கைப்பற்றி வருகின்றோம். அத்துடன் சிங்கள இராணுவ இயந்திரத்திற்கு இறுதி அடி கொடுக்கக்கூடிய வகையில் தமிழர் படைபலத்தைப் படிப்படியாகப் பெருக்கியும் வருகின்றோம்.**

ஆயுதப்படைகள், பாராதுருப்புக்கள் என்ற இந்த இரண்டு வகையினரையும் சேர்த்துப் பார்த்தால் இன்று ஒரு இலட்சத்து ஐம்பதாயிரத்திற்கும் (1, 50, 000) மேற்பட்ட எண்ணிக்கையை உடைய ஆயுதபாணிகள் சிறிலங்கா இராணுவ இயந்திரத்தின் அங்கத்தினராக உள்ளனர்.

## இராணுவ இயந்திரத்தின் விரிவாக்கமும் இராணுவச் செலவீனங்களும்

சிறிலங்காவின் இராணுவ இயந்திரமானது 1983 ஆம் ஆண்டிலிருந்து முழுமூச்சுடன் கட்டி வளர்க்கப்படத் தொடங்கியது.

தேசிய பாதுகாப்பு அமைச்சு என ஒன்றை திரு. லலித் அத்துலத்முதலியின் தலைமையில் உருவாக்கிய அப்போதைய சிறிலங்கா ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா, இராணுவ விரிவாக்கத்தின் கதவைத் திறந்துவிட்டார்.

இஸ்ரேல், பாகிஸ்தான், தென்ஆபிரிக்கா, சீனா போன்ற நாடுகளிடம் இருந்து இராணுவ உதவிகளையும், ஆலோசனைகளையும் பெற்று ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்களைப் படையில் சேர்த்து, சிறிலங்கா அரசு தனது படைப்பலத்தைப் பெருக்கிக் கொள்ளத்தொடங்கியது.

1983ஆம் ஆண்டு சுமார் 15,000 பேருடன் சாதாரண எஸ். எல். ஆர் 303 ரக சுரிகுழல் துப்பாக்கிகளுடன் இருந்த சிறிலங்காவின் ஆயுதப்படை, 1991 ஆம் ஆண்டு ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட போர் வீரர்களின் எண்ணிக்கையுடன் நவீனரக ஆயுததளபாடங்களுடன் ஒரு பலம்மிக்க இராணுவ இயந்திரமாக மாறி நிற்கிறது.

1987 ஆம் ஆண்டு இந்திய-சிறிலங்கா ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் வரை சிறிலங்கா அரசானது தனது தரைப்படையைக் கட்டி வளர்ப்பதிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்தது.

## படை விரிவாக்கம்

ஆனால் தமிழீழ - இந்தியப் போரின் முடிவுக்குப் பின்னர் மீண்டும் சிறிலங்கா இராணுவத்துடன் போர் ஆரம்பமாகியபோது, சிறிலங்காவின் தரைப்படை புலிகளைச் சமாளிக்கமுடியாது திண்டாடியது. இதனால் விமானப்படையையும், கடற்படையையும் பலப்படுத்திப் புலிகளுக்கு எதிராகப் போராடவேண்டிய தேவை சிறிலங்கா அரசுக்கு எழுந்தது. இதன் காரணமாக 1990/91 ஆம் ஆண்டுகளில் கடற்படையும் விமானப்படையும் விரிவுபடுத்தப் பட்டன.

1988/89 ஆம் ஆண்டுகளில் சிறிலங்காக் கடற்படையில் 5, 500 பேர் இருந்தனர். விமானப்படையில் 3,700 பேர் இருந்தனர். ஆனால் 1990/91 ஆம் ஆண்டுகளில் கடற்படை சுமார் 15, 000 ஆக அதிகரிக்கப்பட்டது. விமானப்படை 5, 000 ஆக அதிகரிக்கப்பட்டது. இந்த ஆட்தொகை அதிகரிப்புக்கு ஏற்றவிதத்தில் நவீன இராணுவத் தளபாடங்களையும் கொள்வனவு செய்தது.

அத்துடன் 1988/89 ஆம் ஆண்டுகளில் இருந்ததைவிட சிறிலங்காவின் தரைப்படையும் 1990/91 இல் அதன் ஆள் எண்ணிக்கையை இரண்டு மடங்காக உயர்த்தி விட்டது.

1988/89 ஆம் ஆண்டுகளில் சிறிலங்காவின் தரைப்படை 40, 000 போர்வீரர்களைக் கொண்டிருந்தது. இன்று அது 80, 000 ஆக அதிகரிக்கப்பட்டு விட்டது. இத்துடன் புலிகளுடனான போர் அனுபவங்களின் வெளிப்பாடாக, நீண்டதூரம் பாயும் ஆட்லறிகளையும், சக்திமிக்க கவசவாகனங்களையும் பெருமளவில் தரைப்படை கொள்வனவு செய்ய வேண்டிய கட்டாயம் எழுந்தது.

இவ்விதமாக நவீன ஆயுத தளபாடங்களுக்குரிய தேவை எழுந்த பொழுதிலும் அவற்றைக் கொள்வனவு செய்வதில் சிறிலங்கா அரசு பெரும் தடைகளை எதிர்நோக்கியது.

நவீன ஆயுதங்களின் அதிஉயர் விலை காரணமாகவும், அத்தகைய ஆயதங்களை சிறிலங்கா அரசுக்கு வழங்க பல மேற்கு நாடுகள் மறுத்த காரணத்தாலும் திண்டாடிக்கொண்டிருந்த சிறிலங்கா அரசிற்கு, கிழக்கு ஐரோப்பாவில் ஏற்பட்ட அரசியல் பிரளயம் ஒரு வாய்ப்பை ஏற்படுத்தி விட்டது.

கிழக்குஐரோப்பிய நாடுகளில், குறிப்பாக யூகோஸ்லாவியா, செக்கோசிலவாக்கியா, கங்கேரி போன்ற நாடுகள் தம்மிடமிருந்த மிதமிஞ்சிய ஆயுத தளபாடங்களை குறைந்த விலைகளில் எந்த நாட்டிற்கென்றாலும் விற்பனை செய்யத்தயாராக இருந்தன. அதேவேளை மலிவுவிலையில் சீனாவும் சிறீலங்காவிற்கு ஆயுதங்களை விற்கத் தயாராக இருந்தது.

கடற்படைப்படகுகள், கவசவாகனங்கள் போன்ற நீண்ட தூரம் குண்டுகளைத் தள்ளக்கூடிய ஆட்லறிகள் அவற்றிற்கான வெடிமருந்துகள், உதிரிப்பாகங்கள் என்பவற்றை மேற்குறித்த நாடுகளிடமிருந்து சிறிலங்கா அரசு குறைந்த விலையில் கொள்வனவு செய்தது.

தொடர்ச்சி 10ம் பக்கம்....

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இந்திய ஜனாதிபதி தெரிவு- நாடகம் ஆரம்பித்து விட்டது

யூலை 13 புதிய ஜனாதிபதி தெரிவு நாள். இதனையொட்டி அரசியல் அரங்கில் வழமையான குத்துக்கரணங்கள் ஆரம்பித்து விட்டன. இம்முறை கிறிஸ்தவ ரான G. G. Swell ஆளும் கட்சி சார்பில் போட்டியிடுகிறார். இந்துவெறி, பாரதிய ஜனதாக் கட்சி இவரை ஆதரித்துத் தள்ள வேண்டிய நிலைக்கு வந்துள்ளது. முஸ்லீம்களை ஒழிக்க கிறிஸ்தவ சிறுபான்மையோர் ஆதரவை நாடப்போகின்றதா? முன்னாள் பிரதமர் வி. பி. சிங் சிறுபான்மையோர் பக்க ஆதரவாளர் என்பதால் இவரை ஆதரிப்பதில் சந்தேகமில்லை. இரு மாக்ஸிஸக்கட்சிகளும் நரசிம்மராவ் தனது பிரதமர் பதவிக்காலத்துக்குள் முழு இந்தியாவையும் உலக வங்கிக்கு விற்று விடுவார் எனக் குரல் எழுப்பி வந்தன. அவர்களும் ஆளும் கட்சி வேட்பாளரை ஆதரிக்கப் போகிறார்கள்.

எதிர்க் கட்சிகள் யாவும் ஒன்று சேர்ந்தால் தாம் விரும்பிய ஒருவரை ஜனாதிபதியாக்க முடியும். அவ்வாறு நிகழ்ந்தால் யார் கூடிய பலனை அனுபவிப்பார்கள் என்ற பிரச்சினை இங்கு எழுகின்றது. இந்திய ஜனாதிபதிக்கு உள்ள அதிகாரத்தின்படி அவர் தாம் நினைக்கும் கட்சியின் தலைவரைப் பிரதமராகும்படி கேட்கலாம். பதிலுக்குப் பிரதமர் சபையில் தனது பலத்தை நிருபிக்க வேண்டும். குத்துக்கரணங்களும் ஊழலும் நிறைந்த இந்திய அரசியலில் யாராவது ஒரு எதிர்க்கட்சி இவ்வழிகளின் மூலம் பதவியைப் பெற்று விடலாம் என்கின்ற பயம் எதிர்க்கட்சிகளுக்கு. ஆளும் கட்சி பதவியில் இருந்தாலும் தம்மவர்களில் ஒருவர் பிரதமராகிவிடக்கூடாது என்பது தான் எதர்க்கட்சியினர் போக்கு. பிறகு என்ன? பிரதமர் நரசிம்மராவ் நிம்மதியாகத் தனது பதவிக் காலத்தை முடித்து விடலாம் தானே.

## சிறீலங்கா...

அதேவேளை சீனாவிடமிருந்து புதிய போர் ஜெட்விமானங்களையும், Y12, Y8 போன்ற பாரிய விமானங்களையும் சிறிலங்காவின் விமானப்படை கொள்வனவு செய்தது.

கடற்படையைப் பொறுத்தளவில் அதிவேக டோரா சண்டைப்படகுள், ரேடர் கருவி பொருத்தப்பட்ட சக்திமிக்க கண்காணிப்புக் கப்பல்கள், அதிவேகதுருப்பேற்றிகள் (Fast Troops Carrier) போன்றவற்றையும் அண்மைக்காலங்களில் இஸ்ரேலிடமிருந்தும், தென் கொரியாவிடமிருந்தும் கொள்வனவு செய்துள்ளது.

மலிவுவிலையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தாலும் கூட இந்த ஆயுதக் கொள்வனவுகள், ஆட்தொகை அதிகரிப்புக்களுக்கெல்லாம் சிறிலங்கா அரசிற்கு பெருமளவு நிதி வேண்டியிருந்தது. இதன் காரணமாக சிறிலங்கா அரசின் பாதுகாப்புச் செலவீனம் என்றுமில்லாத வகையில் அதிகரித்துள்ளது.

### பாதுகாப்புச் செலவீனங்கள்

10 வருடங்களுக்கு முன்னர் அதாவது 1981 ஆம் ஆண்டு, சிறிலங்கா அரசின் பாதுகாப்புச் செலவீனம் அரசின் மொத்தச் செலவீனத்தில் 3 சதவீதமாகவே இருந்தது.

ஆனால் 1991 ஆம் ஆண்டு, சிறிலங்கா அரசின் மொத்தச்செலவீனத்தில் 20 சதவீதம் பாதுகாப்புச் செலவீனங்களுக்கு செலவாக்கப்பட்டிருந்தது.

அதாவது 1981 ஆம் ஆண்டு சிறிலங்கா அரசு 1, 100 கோடி ரூபாவையே பாதுகாப்புத்துறைக்கெனச் செலவு செய்தது. ஆனால் 1991 ஆம் ஆண்டு 16, 700 கோடி ரூபாவைத் தனது இராணுவ இயந்திரத்திற்கு நிதியாக வழங்கியுள்ளது. இன்னுமொருவகையில் சொல்லப்போனால் மொத்தம் 25 அமைச்சுக்களைக் கொண்டு விளங்கும் சிறிலங்கா அரசு இயந்திரத்தில் ஒரு அமைச்சக வேலையாக இருக்கும் பாதுகாப்பு அமைச்சுக்காக, மொத்தச் செலவீனத்தில் 1/5 பங்கை ஒதுக்குவதென்பது சாதாரணவிடயமல்ல இது சிறிலங்காவின் அபிவிருத்தியைச் சீர்குலைப்பதுடன், அரசிற்குப் பாரிய பொருளாதார நெருக்கடிகளையும் தோற்றுவித்து இறுதியில் சிறிலங்கா அரசையே ஆட்டங்காணச் செய்யும் சாத்தியக்கூறுகளைக் கொண்டுள்ளது.

1984 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை சிறிலங்கா அரசின் இராணுவச் செலவீனங்கள், அரசின் சக்திக்கு அப்பாற்பட்ட வகையில் கிடுகிடுவென உயர்ந்து சென்றதை அறிந்துகொள்ள முடியும். இந்தச் செலவீன அதிகரிப்பை சிறிலங்கா ஆட்சியாளர்கள் எப்படி ஈடுசெய்து வந்தார்கள் என்பதை, சகலரும் அறிந்து வைத்திருந்தார்கள்.

அதாவது, பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களுக்கென வெளிநாடுகள் வழங்கிய நிதி உதவிகளை தந்திரமாகத் திசை திருப்பி, பாதுகாப்புச் செலவீனங்களை ஈடுசெய்வதை உணர்ந்து கொள்ளக்கூடியதாகவுள்ளது.

1991ஆம் ஆண்டு வெளிநாடுகளிடமிருந்து சிறிலங்கா அரசிற்குக் கிடைத்த நிதியுதவி 23, 247 கோடி ரூபாய்களாகும் அதே ஆண்டு சிறிலங்கா அரசின் பாதுகாப்புச் செலவீனம் 16, 700 கோடி ரூபாய்களாகும்.

வருடாவருடம் அதிகரித்துவரும் வெளிநாட்டு உதவிகளை அனுசரித்து சிறிலங்கா அரசும் தனது பாதுகாப்புச் செலவீனங்களை அதிகரித்து வருவதை, அட்டவணை - 1 சூசகமாகக் காட்டுகின்றது.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தாகி இந்தியப் படைகள் தமிழீழத்தை ஆக்கிரமித்து நின்ற 1987, 88, 89 ஆம் ஆண்டுகளில் சிறிலங்கா அரசின் பாதுகாப்புச் செலவீனங்களில் பெரும் பங்கை இந்திய அரசு தனது தலையில் கட்டிச் சுமந்ததை உலகம் அறியும், அதனால் அக் காலப்பகுதியில் சிறிலங்கா அரசின் பாதுகாப்புச் செலவீனம் கணிசமான அளவு குறைந்திருந்தது.

1981 ஆம் ஆண்டு பாதுகாப்புச் செலவீனமாக நாளொன்றிற்கு 30 இலட்சம் ரூபாவைச் செலவு செய்து வந்த சிறிலங்கா அரசு, 1990 ஆம் ஆண்டு நாலு கோடி ரூபாவையும், 1991 ஆம் ஆண்டு நாலு கோடியே ஐம்பதுலட்சம் ரூபாவையும் நாளொன்றிற்குச் செலவு செய்துள்ளது.

### சிங்கள இராணுவ இயந்திரம் சாதித்தது என்ன?

இத்தகைய பாரிய செலவுகளைச் செய்து உருவாக்கப்பட்ட இந்த இராணுவ இயந்திரத்தால் சிறிலங்கா அரசு சாதித்தது என்ன? பல்லாயிரம் தமிழீழ மக்களைப் படுகொலை செய்து, தமிழர் பொருளாதாரத்தைச் சிதைத்து, தமிழர்களது அமைதியான சுதந்திரமான வாழ்வைக் குலைத்துக் கொண்டிருப்பதைத் தவிர வேறேதும் செய்யவில்லை.

ஆனாலும் இந்த அடக்குமுறை இராணுவ இயந்திரத்தை படிப்படியாக அடித்து நொருக்குவதில் நாம் நம்பிக்கைக்குரிய ள வெற்றிகளைப் பெற்றுவருகின்றோம்.

பலகோடி ரூபாய்களைச் செலவு செய்து சிறீலங்கா அரசுR கொள்வனவு செய்யும் பல நவீன ஆயுததளபாடங்களை, சிங்களப்படைகளிடமிருந்து கைப்பற்றி வருகின்றோம்.

அத்துடன், சிங்கள இராணுவ இயந்திரத்திற்கு இறுதி அடி கொடுக்கக்கூடிய வகையில், தமிழர் படைப்பலத்தைப் படிப்படியாக பெருக்கியும் வருகின்றோம்.

| ஆண்டு | வெளிநாட்டு உதவி | பாதுகாப்புச்செலவு |
|---|---|---|
| 1981 | 8,208 கோடிரூபா | 1,100 கோடிரூபா |
| 1982 | 9,777 ,, | 1,117 ,, |
| 1983 | 9,837 ,, | 1,759 ,, |
| 1984 | 12,137 ,, | 2,482 ,, |
| 1985 | 12,339 ,, | 5,716 ,, |
| 1986 | 15,917 ,, | 9,777 ,, |
| 1987 | 14,765 ,, | 11,386 ,, |
| 1988 | 19,563 ,, | 9,373 ,, |
| 1989 | 18,410 ,, | 8,792 ,, |
| 1990 | 23,247 ,, | 14,601 ,, |
| 1991 | -- -- | 16,700 ,, |

**கடந்த 10 வருடங்களில் சிறிலங்கா அரசு பெற்ற வெளிநாட்டு உதவிகளும் சிறிலங்கா அரசின் பாதுகாப்புச் செலவீனங்களும்**

1986/1987 ஆம் ஆண்டுகளில் சிறிலங்காவின் ஆயுதப் படையில் 37, 660 ஆயுதப்படைகள் இருக்க, 2000 புலி வீரர்கள் இருந்தார்கள். இது 18 இராணுவத்திற்கு 1 புலி என்ற விகிதமாகும். ஆனால் 199-0/91 இல் சிறிலங்காவின் ஆயுதப் படையில் 1 00,000 போர் வீரர்கள் இருக்க எம்மில் 10, 000 புலிவீரர்கள் இருந்தார்கள்.

இது 10 இராணுவத்திற்கு ஒரு புலி என்ற விகிதமாகும்.

சிறிலங்கா அரசானது கடும்பிரயத்தனப்பட்டு தனது இராணுவ இயந்திரத்தைப் பலப்படுத்திக் கொள்ளும் அதேசமயம், தமிழீழ மக்களின் தேசிய பலம் ஒன்று திரட்டப்பட்டு, தியாகங்களின் மூலம் தமிழர்படை பலமும் கட்டிவளர்க்கப்பட்டு வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

இந்த அடக்குமுறை இராணுவ இயந்திரத்தை அடித்து நொருக்குவதில் நாம் நம்பிக்கைக்குரிய வெற்றிகளைப்RR பெற்று வருகின்றோம். பல கோடி ரூபா செலவு செய்து, சிறிலங்கா அரசு கொள்வனவு செய்யும் பல இராணுவத் தளபாடங்களை சிங்களப் படைகளிடமிருந்து கைப்பற்றி வருகின்றோம். அத்துடன் சிங்கள இராணுவ இயந்திரத்திற்கு இறுதி அடி கொடுக்கக்கூடிய வகையில் தமிழர் படைபலத்தைப் படிப்படியாகப் பெருக்கியும் வருகின்றோம்.

# சர்வதேசக் களம்

**- சாரதாதேவி-**

## ஆப்கானில் சட்ட ஆட்சி ஏற்படுமா?

ஆப்கானில் ஐந்து குழுக்களின் செல்வாக்கு குறிப்பிட்ட இடங்களில் காணப்படுகிறது. அப்பிரதேசங்களில் எக்குழுவுக்குச் செல்வாக்கு உண்டோ அக்குழுவின் ஆட்சியே இடம் பெறுகிறது. தற்காலிக ஜனாதிபதி முஜாடிடி ஏற்கனவே ஒத்துக் கொண்டபடி ரபானிக்கு பதவியைக் கொடுக்க விரும்பவில்லை. பழமை மத வெறியரான கிக்மட்யாரின் ஆட்கள் பல இடங்களிலும் நாசவேலையில் ஈடுபட்டுள்ளனர். இவையெல்லாவற்றையும் பார்த்தால் போர் முடிந்த பின் ஏற்படும் என நினைத்த சட்ட ஆட்சி என்ற நம்பிக்கை மறைந்து விடுகிறது.

## தென் ஆபிரிக்க படுகொலைகள் தொடர்கின்றன

நெல்சன் மண்டேலா விடுதலையின் பின்பு சமாதானமும், சகஜ வாழ்வும் ஏற்படும் என எதிர் பார்க்கப்பட்டது. கடந்த வாரம் மண்டேலா நடத்திய எழுச்சிக் கூட்டத்தின் மீது அரச படைகள் நடாத்திய துப்பாக்கிச் சூட்டில் ஏராளமான பொதுமக்கள் பலியாகினர். பொலிஸ் படையை தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியவில்லை என மண்டேலாவுக்கு ஜனாதிபதி கிளார்க் இரகசிய சந்திப்பில் தெரிவித்திருந்தாராம். புத்தலேசியின் இன்காட்டா இயக்கத்தினராலும், பொலிஸ் படையாலும் பல தடவை ஜீலு இனத்தவர் கொல்லப்பட்டனர். ஆபிரிக்க ஒற்றுமை பேசும் மண்டேலா கொதிப்படைந்துள்ள இளைஞர்களைச் சமாதானப் படுத்த வழி தெரியாது திண்டாடுகின்றார். வருட முடிவில் இனரீதியற்ற முறையில் தேர்தல் நடைபெற வாய்ப்பும் குறைகின்றது. இந்நிலையில் அங்கு வாழும் பல வெள்ளையர், கலப்பினத்தவர்கள் யாவரும் நாட்டை விட்டு வெளியேறும் வாய்ப்பும் உண்டு. இப்போக்கு நீண்ட காலத்தில் தென் ஆபிரிக்கா பல நாடுகளாக உடைய வழிகோலக்கூடும்.

## பொருளாதாரத் தடையை உடைத்த ஐ. நா.

யூகோஸ்லாவியாவில் இருந்து பிரியப் போகும் மற்றுமொரு நாடான பொஸ்னியா மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டது யாவரும் அறிந்ததே. சர்வதேச நெருக்கடி, ஐ. நாவின் கண்டனம் எதையும் பொருட்படுத்தாது சரயேவோ விமானத் தளத்தை முற்றுகையிட்டு நிவாரணங்கள் வந்து இறங்குவதை சேர்பியா தடுத்து வந்தது. ஐரோப்பியா பொருளாதாரக் கூட்டணி, அமெரிக்கா போன்றவை கடும் எச்சரிக்கைகளை விட்டும் சேர்பியா பணிந்து கொள்ளவில்லை. ஐ. நா. சமாதானப் படை ஏனைய யூகோ பிரதேசங்களில் தனது தொகையை அதிகரித்து மிரட்டிப் பார்த்தும் சேர்பியா பணியவில்லை.

சமாதானப்படை என்ற போர்வையில் பிற நாடுகளில் இறங்கிய சமாதானத் தூதுவர்கள் போல் ஐ. நா. ஆயுதங்களைப் பாவிக்க முடியவில்லை. நீல கெல்மெட் என அழைக்கப்படும் ஐ. நா. படையினர் தமக்குப் பல இழப்புக்கள் வந்தாலும் எவ்வளவு கொடியவர்கள் மீதும் ஆயுத பலம் உபயோகிப்பதில்லை என்ற கொள்கை உடையவர்கள். நிலைமை இழுபறியில் இருந்து வந்தது.

இவ் வேளையில் இரண்டாம் உலக யுத்த கதாநாயகனான பிரான்ஸிய ஜனாதிபதி மிட்டரான்ட் பலவந்தமாக விமானம் மூலம் சரயேவோ போய் இறங்கினார். இவருக்கு ஏதாவது ஆபத்து நேரின் பின் விளைவுகள் பாரதூரமாக இருக்குமென்பதை உணர்ந்த சேர்பியா விட்டுக் கொடுத்தது. தனக்குப் புகழையும், பிரான்ஸிற்கு உலகளாவிய ரீதியில் பங்கு உள்ளது என்பதையும் இவர் நிலைநாட்டி விட்டார். இதனால் ஐ. நா. விமானப் பணி, பாதிக்கப்பட்ட பொஸ்னிய மக்களுக்குச் சுலபமாக கிடைக்க வழி பிறந்தது.

## இஸ்ரேலிய தொழிலாளர் கட்சி வெற்றியும் பாலஸ்தீனர்களுக்குத் தீர்வும்

கடந்த மாதம் முடிவடைந்த இஸ்ரேலியத் தேர்தலில் தொழிலாளர் கட்சி வெற்றி பெற்றுள்ளது. இக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் பாலஸ்தீனியர்களுக்கு உள் விவகாரங்களில் சுய ஆட்சி வழங்கப் போவதாகக் கூறப்பட்டுள்ளது. இவர்கள் அடைந்த வெற்றி இஸ்ரேலிய மக்கள் இக் கொள்கைக்கு அளித்த சம்மதம் என்றே கருத வேண்டும். முற்றாக பாலஸ்தீனர்களை அரசியல் உரிமையற்ற இனமாக ஆட்சி செய்ய நினைப்பது இஸ்ரேலியப் பொருளாதாரத்துக்குச் சீர்கேடும் மக்களுக்கு அநாவசிய இழப்புக்களையும் ஏற்படுத்தும் என்பதை மக்கள் இப்போது உணர்ந்து விட்டனர். நிலைமை எவ்வாறு இருப்பினும் தனி ஒரு நாடாக விருந்த பாலஸ்தீனம் உருவாவதை இன்னும் இஸ்ரேலிய மக்கள் உணரவில்லை என்றே கூற வேண்டும். ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தனி அரசே தீர்வு

## மாற்றுத்திட்டத்தை முன்வைக்க வேண்டியது ஸ்ரீலங்கா அரசே !

**புலிகள் ஸ்ரீலங்கா அரசிடம் ஏன் தீர்வை முன்வைக்கவில்லையென விளக்கும் ஒப்பந்தங்கள் பற்றிய மேலோட்டமான அரசியல் பின்னணியின் விபரிப்பு. தமிழ் மக்களின் பிரச்சினையை தமிழ் மக்களின் கண்ணோட்டத்திலிருந்து அணுகும் வரை பிரச்சினை தீராது. ■**

தமிழ் மக்களின் பிரச்சினைக்கு சிங்கள அரசு எத்தகைய தீர்வொன்றினை முன்வைக்கத் தயாராய் உள்ளது? இதுவே இப்போதுள்ள பிரதான கேள்வி.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் ஒரு தீர்வுத்திட்டத்தை முன்வைக்க வேண்டுமென்ற சர்ச்சை தென் இலங்கையில் எழுந்துள்ளது. மங்கள முனசிங்கா தலைமையிலான தெரிவுக்குழுவுக்கு புலிகள் சாட்சியம் அளிக்க வேண்டுமென்ற கோரிக்கையும் எழுந்திருந்தது. ஆனால் இவை சம்பந்தமாக விடுதலைப் புலிகள் இயக்கமானது தமது உத்தியோக பூர்வ பத்திரிகையாகிய ஏப்ரல் மாத 'விடுதலைப்புலிகள்' இதழில் எழுதிய ஆசிரிய தலையங்கத்தில் தீர்வுத்திட்டத்தை புலிகள் முன்வைக்க வேண்டிய அவசியம் இல்லையென்ற அபிப்பிராயத்தை முன் வைத்துள்ளனர். ஆய்வுத்தரம் (Academic Standerd) வாய்ந்த ரீதியில் எழுதப்பட்ட அவ்வாசிரியத் தலையங்கத்தில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

"தமிழர்களின் உரிமைக்காகப் போராடி வரும் விடுதலைப்புலிகளிடம் ஒரு தீர்வுத் திட்டம் இல்லாமலில்லை. தமிழீழத் தனி அரசு தான் அந்தத் தீர்வு. இந்தத் தீர்வைச் சிங்கள ஆளும் வர்க்கம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. அப்படியானால், மாற்றுத் தீர்வை முன்வைப்பது அவர்களது கடப்பாடு ஆகும். அப்படி வைக்கப்படும் மாற்றுத்தீர்வு தமிழீழ மக்களால் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதா என்பதை விடுதலைப்புலிகள் பரிசீலனை செய்யத்தயார். இதுதான் விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு.

பேச்சுவார்த்தை சம்பந்தமாக வெளிநாட்டு அழுத்தங்களையும் உள்நாட்டு நெருக்கடிகளையும் சுட்டிக்காட்டியுள்ள அவ்வாசிரிய தலையங்கமானது பிரச்சனைக்குத் தீர்வு காணவேண்டிய பொறுப்பு சிங்கள அரசுக்கேயுண்டு என்பதையும் வலியுறுத்தியுள்ளது.

பொதுவாகத் தமிழ் மக்களின் பிரச்சனை சம்பந்தமாக கடந்த காலத்தில் சிங்கள அரசு கடைப்பிடித்து வந்த போக்கினையும் இன்றைய நிலையில் தென்னிலங்கை அரசியல் நிலவரங்களையும் விளங்கிக் கொண்டு அதில் தமிழ் மக்கள் பக்கத்திலான நிலைப்பாடு எவ்வாறு அமையலாம் என்பதைக் கண்டு கொள்வதே பொருத்தமுடையதாகும்.

தமிழ் மக்கள் சமாதானத்தை விரும்புகின்றனர் என்பதை தமிழ் மக்களுக்குத் தலைமை தாங்கும் விடுதலைப்புலிகள் இயக்கம் பகிரங்கமாக அறிவித்துள்ளது. இதற்கு முன்னோடியாக பல நல்லெண்ண நடவடிக்கைகளை யு வெளிக்காட்டியும் உள்ளது. ஆகவே இதனைப் பயன்படுத்தி ஒரு தீர்வைக்காண வேண்டிய பொறுப்பு சிங்கள அரசுக்கேயுண்டு. தமிழர்கள் கேட்பதை சிங்களவர்கள் கொடுப்பதில்லை. எனவே என்ன வேண்டுமென்று இப்போது புலிகள் கேட்க முடியாது. என்ன உரிமைகளைக் கொடுக்கப் போகின்றோம் என்பதைச் சிங்களவரே கூற வேண்டும். அது போதுமா, அல்லவா என்பதைப் புலிகள் பின்பு கூறலாம். புலிகள் தமக்கென்று ஒரு தீர்வைக் கூறி விட்டார்கள். அது தமிழீழம் என்பதே. ஆனால் அரசு, தமிழ் மக்களைத் திருப்திப்படுத்தக் கூடிய வேறொரு தீர்வினை முன்வைத்தால் தாம் அதனைப் பரிசீலனை செய்யத் தயாராய் உள்ளோம் என்பதே புலிகளின் நிலைப்பாடு. நிலைமை இவ்வாறிருக்க தீர்வுத்திட்டமொன்றை புலிகளே முன் வைக்க வேண்டுமென்று கோருவது யதார்த்தத்துக்கு முரண்பாடானதும், தர்க்கத்திற்கு அப்பாற்பட்டதுமாகும்.

இவற்றின் பின்னணியையும் அரசியல் போக்கையும் விளங்கிக் கொள்ள கடந்த கால அரசியல் வரலாற்றினைப் பரிசீலனை செய்வது சாலச் சிறந்ததாகும்.

### ஒப்பந்தங்களின் பின்னணிகள்

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கெல்லாம் தீர்வு காணும் வகையில் காலத்திற்குக் காலம் சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ்த் தலைவருடன் உடன்பாட்டுக்கு வந்தார்கள். அவ்வாறான குறைந்த பட்ச உடன்பாடுகளுக்குக் கூட தாம் பலமுறும் கட்டங்களில் அதை நிராகரித்து விட்டார்கள். குறிப்பாக செல்வா-பண்டா ஒப்பந்தம், இலங்கை-இந்திய ஒப்பந்தம் ஆகியவற்றை இப்பின்னணியில் வைத்துப் பரிசீலனை செய்வது அவசியம். மேற்படி ஒப்பந்தங்களில் சம்பந்தப்பட்டவர்களின் நோக்கு நிலைகள் அவர்களால் ஒப்பந்த உருவாக்கலின் போது வெளியிடப்பட்ட கருத்துக்கள் பற்றியும் தமிழ் மக்கள் மத்தியில் ஆய்வுகள் வெளிவராதிருப்பது துரதிஸ்டமானது. அரசியல் ரீதியான அறிவியல், அனுபவத் தொகுப்பை இது குறைத்து விட்டதென்றே சொல்லலாம். இச்சிறு கட்டுரையானது மேற்படி ஒப்பந்தங்களின் முழு உள்ளோட்டங்களையும் காட்ட முடியாத நிலையில் ஒப்பந்தங்கள் பற்றிய மேலெழுந்தவாரியான அரசியல் பின்னணியை மட்டும் விபரிக்க முற்படுகிறது. அது இன்றைய அரசியல் சூழலை விளங்க ஓரளவு உதவக்கூடும்.

பண்டாரநாயக்கா ஆட்சிக்கு வந்தபோது அவருக்கிருந்த பிரதான பிரச்சினை நிலைபெற்றிருந்த ஐ. தே. க சார்பு அரசு யந்திரத்திலிருந்து தனது அரசாங்கத்தைத் தற்காத்துக் கொள்ள வேண்டும் என்பதே சுதந்திரத்திற்கு முன்பிருந்தே• ஐ. தே. க சார்புநிலையில் அரசு யந்திரம் அமைக்கப்பட்டிருந்து. தொடர்ந்து 10 வருடங்கள் ஐ. தே. க வின் ஆட்சியே இலங்கையில் நிலவியது. பொலிஸ் இராணுவம் மற்றும் நிர்வாக இயந்திரம் எல்லாம் ஐ. தே. க சார்பாகவே இருந்தன. கிறிஸ்தவ மிசன், மற்றும் வெளிநாட்டு முதலீடு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள் என்பனவற்றுக்கு எதிரான போக்குடையவராக பண்டாரநாயக்கா காணப்பட்டார். இவற்றால் உள்நாட்டு, வெளிநாட்டு ரீதியில் பண்டாரநாயக்காவுக்கு பலமான எதிர்ப்பு இருந்தது. இவற்றினை எல்லாம் சமாளிக்க தமிழின எதிர்ப்பு அரசியலையே பண்டாரநாயக்கா மூலோபாயமாகக் கொண்டார். அது பரந்த சிங்கள மக்களின் ஆதரவை வென்றெடுக்க உதவுமென நினைத்தார்.

56 இல் பண்டாரநாயக்கா பதவிக்கு வந்த பின்பு தனிச்சிங்கள சட்டத்தை நிறைவேற்றினார். அதற்கெதிராக தமிழரசுக் கட்சி திருமலை யாத்திரையை நடாத்தியது. இவ் யாத்திரையை சாட்டாக வைத்துக் கொண்டு தமிழர் படையெடுப்பை முறியடிப்பதாகக் கூறி பண்டாரநாயக்கா ஒரு லட்சம் தொண்டர் படையைச் சேர்த்தார். இத் தொண்டர் படைக்கு ஆயுதப் பயிற்சி அளிப்பதும் ஒரு திட்டமாகும். இத்தொண்டர் படையை படிப்படியாக பொலிஸாகவும் இராணுவமாகவும் மாற்றுவதே பண்டார நாயக்காவின் திட்டமாகும்.

இத்தொண்டர் படை பற்றி அக்காலத்தில் ஜே. ஆர். ஜெயவர்த்தனா சொன்ன கருத்து முக்கியமானது. இத்தொண்டர் படையை சு. க. ஆமி என ஜே.-ஆர். வர்ணித்தார். அந்த அடிப்படையில் தொண்டர் படை அமைப்பை ஐ. தே. க. வன்மையாக எதிர்த்தது. உண்மையில் பண்டாரநாயக்காவின் உள்நோக்கம் என்னவெனில் நீண்ட காலத்தில் நிலைநிறுத்தப்பட்டிருந்த ஐ. தே. க. சார்பு இராணுவம், பொலிஸ் மற்றும் அரசு இயந்திரத்துக்கு எதிராக சுதந்திரக்கட்சி சார்பு பொலிஸ் அரசு இயந்திரத்தை அமைப்பதேயாகும். ஆயினும் ஐ. தே. க. வின் எதிர் நடவடிக்கையினால் இத்திட்டம் தோல்வியில் முடிந்தது.

இந்நிலையில் பண்டாரநாயக்காவின் இத்திட்டம் தோல்வியில் முடிந்து அவர் தான் எதிர் பார்த்த பலத்தை இழந்தார். தமிழரசுக் கட்சி தனது நேரடிப் போராட்டத்தில் ஈடுபடுவதற்காக அரசாங்கத்திற்கு கொடுத்திருந்த ஒரு வருட கால அவகாசம் முடிவடையும் கட்டம் பண்டாரநாயக்காவுக்கு பலவகையிலும் தென்னிலங்கையில் அரசியல் நெருக்கடி உச்சக்கட்டத்தை அடைந்திருந்த காலம். பண்டாரநாயக்காவின் கூட்டணி அரசாங்கத்திற்குள் பிளவு உருக்கொண்ட காலம். ஐ. தே. க. வினதும் வெளிநாட்டு நிறுவனங்களினதும் கிறிஸ்தவ மிசன்களினதும் நெருக்கடிகள் மேலோங்கிய காலம். இந்நிலையில் தமிழரசுக் கட்சியின் நேரடிப் போராட்டத்தில் ஈடுபடுவது பண்டாவுக்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய நிலையாகவே இருந்தது. எனவே பண்டா தன் தென்னிலங்கை நெருக்கடியின் நிமித்தம் செல்வாவுடன் ஓர் சமரசத்திற்கு வரத் தயாரானார். இப்பின்னணியில்தான் பண்டா-செல்வா ஒப்பந்தம் நிகழ்ந்தது. பண்டா தமிழரசுக் கட்சியை சமாதானப் படுத்தக் கூடிய வகையில் குறைந்த பட்ச ஒப்பந்தத்திற்கு தயாரானார். இவ்வொப்பந்தம் தமிழரசுக் கட்சி எதிர்பார்த்ததையும், கோரியதையும் விட குறைவானதே. இங்கு பண்டா ஒப்பந்தத்திற்கு வந்தது தமிழரின் உரிமை பற்றிய நோக்கு நிலையிலிருந்தல்ல. தனது சொந்த அரசியல் நெருக்கடியில் ஒரு நெகிழ்ச்சியை ஏற்படுத்துவதற்காகவே.

1965 ஆம் ஆண்டு ஐ. தே. க. செல்வாவுடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டமையும் ஐ.-தே. க. வின் சொந்த லாபத்தை நோக்கமாக கொண்டதே தவிர தமிழ் மக்களின் பிரச்சினையை மையமாக கொண்டதல்ல. 65 பொதுத் தேர்தலின் மூலம் தனித்து நின்று அரசாங்கத்தை அமைக்க முடியாத ஐ. தே. கவும் தமிழரசுக்கட்சியின் அனுசரணையைப் பெற்று அரசாங்கத்தை அமைப்பதற்காக அது தமிழர் பிரச்சினை சம்பந்தமாக ஓர் ஒப்பந்தத்துக்கு வரலாயிற்று. அதுவும் தமிழரசுக்கட்சி கோரியதையும் எதிர்பார்த்தையையும் விடக் குறைவான ஓர் ஒப்பந்தத்தையே செய்து கொண்டது. ஆயினும் தனது பதவி நிலையை ஸ்திரப்படுத்தியதும் ஒப்பந்தத்தை அது கைவிடலாயிற்று.

1987- ம் ஆண்டு இலங்கை- இந்திய ஒப்பந்தத்திற்கும் இதே போன்றதொரு பின்னணியுண்டு. ஜே. ஆர் அரசு பெரும் நெருக்கடிக்கு உள்ளாகிய நிலையில், இந்தியாவின் நேரடித் தலையீட்டினைத் தவிர்ப்பதற்காகவும் இந்தியாவையும் தமிழரையும் ஏமாற்றுவதற்கு ஏற்றவகையிலும் ஒரு தீர்வுக்கு வரவேண்டிய அவசியம் ஜே. ஆருக்கு இருந்தது. இந்நிலையில் ஒரு போலியான திட்டத்தை தமிழரும் இந்தியாவும் ஏற்பதைவிடக் குறைந்த திட்டத்திற்கு விடுதலைப்புலிகளோ அல்லது தமிழ் மக்களோ ஏமாற முடியாத அரசியல் விழிப்பு தமிழ் மக்கள் மத்தியில் நிலவியது.

**மு. திருநாவுக்கரசு**

**ஈழநாதம் - தமிழீழம்**

பொதுவில் மேற்கூறிய மூன்று ஒப்பந்தங்களிலும் சிங்கள அரசு தனது சுய அரசியல் நெருக்கடிகளின் நிமித்தம் தான் ஒப்பந்தங்களுக்கு வந்தது என்பதையும் இறுதியில் அது தன்னை சுதாகரிக்கும் சூழலில் ஒப்பந்தங்களை மீறியதையும் ஒரு பொது உண்மையாகக் காண முடிகிறது.

இதே போலவே விடுதலைப்புலிகளுடன் பிரேமதாசா பேச்சுவார்த்தை நடாத்திய காலமும் பிரேமா தமிழ் மக்களின் நோக்கு நிலையிலிருந்தல்லாமல் இலங்கையில் இந்திய இராணுவத்தின் பிரசன்னத்தால் தென்னிலங்கையில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடிகளைத் தணிப்பதற்காகப் புலிகளுடன் பேசி பிரச்சினையைத் தணிப்பதற்கான நிலைமைக்குத் தயாரானார். தமிழ்த் தலைமைகளுடன் சிங்களத் தலைமைகள் தாம் எதிர்நோக்கிய அரசியல் நெருக்கடிகளைத் தணிப்பதற்காகவே தவிர தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அல்ல.

மேற் குறிப்பிட்ட ஆசிரிய தலையங்கத்தில் எழுதப்பட்டுள்ளது போல சிங்கள அரசுக்கு பல அரசியல் அழுத்தங்கள் உண்டு. அதன் நிமித்தம் அது பேச்சுவார்த்தை பற்றி கதைக்கின்றதாயினும் அது தீர்வுக்குத் தயாரில்லை எனத் தெரிகிறது. சிங்கள அரசியலின் உள் முரண்பாடுகள் இதன் பொருட்டுக் கவனிக்கப்பட வேண்டியவையாகும்.

### இராணுவ நடவடிக்கைக்கு ஏற்ற நிலை

கெடுபிடி யுத்தம் ஒய்ந்ததும கிழக்குஐரோப்பா சிதறியது. அது இலங்கைக்கு கிழக்கு ஐரோப்பாவிலிருந்து அதிகளவு ஆயுத தளபாடங்களை மலிவு விலையில் கொள்வனவு செய்வதற்கான வாய்ப்பைக் கொடுத்தது. மேலும் ஆயுத விற்பனையை ஒரு வர்த்தகமாக மேற்கொள்ளும் சீனா

தொடர்ச்சி [illegible]ம் பக்கம் ....




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நிச்சயம் நம் நாளையுகம் நீதிமகன் வழி பிறக்கும்!

## செஞ்சோலை பூக்களுக்கு!

செஞ்சோலைப் பூக்களே!
செஞ்சோலைப் பாக்களே!
அஞ்சாத யுகத்திற் பூத்த....
யாகப் பூக்களே!

-செஞ்சோலை

'அம்மா' என்றழைக்கத் தோன்றும்!
அப்பாவின் அணைப்புக் கேங்கும்!
கம்மாலை நெருப்புக் காற்றில்
உணர்ச்சி வேகுமே!
கைகோர்த்து ஆடிப் பாடிக்...
கண்மூட மடியைத் தேடிக்...
கண் பூத்துப் போகும்! அன்புத்
தாகம் ஊறுமே!

-செஞ்சோலை

தன்மானப் பாலையுண்டு...
தாகம் தீர்க்கும் பிஞ்சுகள்!
தமிழ் வீரப் பாடல் கேட்டுத்...
தூங்குகின்ற நெஞ்சுகள்!
பொன்னேட்டின் எழுத்துக்கள்!
நம்நாட்டின் குருத்துக்கள்!
பொன்னாளில் வெற்றிமாலை
சூடப்போகும் கழுத்துக்கள்!

-செஞ்சோலை

பிச்சையென்று கையேந்திப்
பேச்சினிலே பொய்யேந்தி...
எச்சிலை எடுக்கும் நிலை...
எம்நாட்டில் என்றுமில்லை!
அச்சமில்லை; அழிவுமில்லை!
அடிமையுகம் இனியுமில்லை!
நிச்சயம் நம் நாளையுகம்...
நீதிமகன் வழி பிறக்கும்!

-செஞ்சோலை

கைத்தொழிலும் கமத்தொழிலும்...
எத் தொழிலும் எந் தொழிலாய்ச்...
சத்தியத்தின் துணையுடனே....
நித்தமும் நாம் செய்திடுவோம்!
இத் தரையில் எமது மண்ணை...
விஞ்சுதற்கோர் சொர்க்கமில்லை!
நற் தலைவன் ஆணையிலே...
நல்லதொரு ஆட்சி செய்வோம்!

-செஞ்சோலை

- பங்கயமணாளன் -



U.T.O
54 Tavistock Place
London WC1H 9RG
Tel: 071-837 7162
Fax: 071-278 5666

T.C.C
341 Rue Des Pyrenees
75020 Paris
France
Tel: 435 81142
Fax: 435 81191

Tamil Confederation
P.O.Box 340251
5270 Gummersbach - 34
Germany

T.C.C
Via Mariano Stabile - 34
90139 Palermo
Italy
Tel/Fax: 091-611 3179

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo - 1
Norway
Tel: 02-191260
Fax: 02-190114

W.T.C.C
Hofjecklin
7415 Rodels
Switzerland
Tel: 077-816609

W.T.C.C
P.O.Box 694
Mulgrave North
Victoria 3170, Australia
Tel: 03-457 6347
Fax: 03-561 8224

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்